# 34வது இலக்கியச் சந்திப்பு - பேர்லின்

09.10.2007 - 10.10.2007

தொகுப்பு: மானசி

1988ம் ஆண்டு ஜெர்மனியில் ஆரம்பித்த இலக்கியச் சந்திப்பு தொடர்ந்து இருபது வருடங்களாகவும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் என்று தொடக்கத்தில் எவரும் எண்ணியிருக்க முடியாது. புகலிடத்தின் முற்றிலும் புதிய சூழலை எதிர்கொண்டவர்களின் வினையாற்றல்கள் எப்போதும் ஒரேவிதமாகவும் இருக்கவில்லை. புகலிடச் சூழலைப் பிரக்ஞை பூர்வமாக எதிர்கொள்வதில் இருந்தே பல்வேறு அமைப்புக்கள் தோற்றம் பெற்றன. இலங்கையின் சிறுபான்மை இனமான தமிழர்களின் மீதான அடக்குமுறையின் மறு உற்பத்தியே புகலிடத் தமிழ்ச் சமூகம் என்பதால் ஈழ விடுதலைப் போராட்டமும், இலங்கை அரசியலின் யதார்த்தமான தகவல்களும், இயக்க அரசியல் தலைவீடுகளும் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான கரிசனை மிக்க பார்வைகளும் இலக்கியச் சந்திப்பினைத் தொடர்ந்து பாதித்துக்கொண்டே இருந்தன.

பேர்லின் நகரில் 2007ம் ஆண்டு ஜுன் 9ம், 10ம் திகதிகளில் இலக்கியச்சந்திப்பின் 34வது தொடர் நடைபெற்றது. புகலிட கலை, இலக்கிய, அரசியல் செயற்பாட்டாளர்களும் ஆர்வலர்களும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வினை இலக்கியச் சந்திப்பின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும் தற்போது பேர்லினில் வசிப்பவருமான பரராஜசிங்கம் அவர்கள் ஆரம்பித்து வைத்து உரையாற்றினார். ஏற்கனவே நடைபெற்ற இலக்கியச் சந்திப்புகள் சிலவற்றில் சிங்கள நண்பர்களும் பங்குபற்றியிருக்கிறார்கள் என்றும் அந்த வரிசையில் இன்று டாக்டர் சுமனசிறீயும் சேர்ந்து கொள்கிறார் என்றும், இலக்கியச் சந்திப்பின் ஆரம்பத்தில் சஞ்சிகைகள் பற்றிய விமர்சனங்கள் என்பது மிக முக்கியமான நிகழ்ச்சியாக இருந்து பின் நீண்ட காலமாக இது விடுபட்டுப் போயிருந்ததென்றும் இப்போது மீண்டும் தொடருவது நல்ல அறிகுறி என்றும் சொன்னார்.

பரராஜசிங்கம் அவர்களின் ஆரம்ப உரையை அடுத்து சுயஅறிமுகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பிரதீபனின் (பிரான்ஸ்) புகைப்படக் கண்காட்சி பற்றிய அறிமுகத்தை ந. சுசீந்திரன் வழங்கினார்.

அங்கு 'இமைகளின் வாயில்' என்னும் பிரதீபனின் அறிமுகக் குறிப்புடன் அவரின் பத்துப் புகைப்படங்களின் தொடர் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. சுசீந்திரன் தனது உரையை ஆரம்பித்தபோது, இலங்கை அரசு மீண்டும் சிறுபான்மை இனங்கள்மீதான விரோதப் போக்கை மறுபடியும் காட்டியிருக்கும் ஒரு துக்ககரமான நிகழ்வுக்குப் பின் சந்திக்கிறோம். கொழும்பில் விடுதிகளில் தங்கியிருந்த தமிழ் இளைஞர்களில் 300க்கு மேற்பட்டவர்களை பலவந்தமாக பஸ்களில் ஏற்றி வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பி வைத்தமையும் அதைத் தொடர்ந்து மனித உரிமை அமைப்புகளின் தலையீட்டினால் அரசியல் சாசனத்தின்மீது தொடுக்கப்பட்ட வழக்கினால் அவர்கள் மீண்டும் கொழும்புக்குத் திருப்பிக் கொண்டு வந்துவிடப்பட்டிருக்கிறார்கள் என்றும் இலங்கை அரசாங்கத்தின் இப்படியான நடவடிக்கைகளை நாங்கள் கண்டிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம் என்பதை வலியுறுத்தி தனது பேச்சை ஆரம்பித்தார்.

சுசீந்திரன்: இது பிரதீபனின் இரண்டாவது புகைப்படக் கண்காட்சி. இவருடைய முதலாவது கண்காட்சி 2006ம் ஆண்டு பாரிஸில் கலைச்செல்வனின் 'மறக்காத மனமுகமாய்...' நிகழ்வில் நடைபெற்றது.

எலி வைன்பேர்க் என்னும் ஒரு புகைப்படக் கலைஞர் கிழக்கு ஜேர்மனில் பிறந்து பிறகு தென்னாபிரிக்காவுக்குப் போனார். தென்னாபிரிக்க முற்போக்குக் கட்சிகளில் தன்னை இணைத்துக்கொண்டு அங்கு ஒரு புகைப்படக் கலைஞராக இருந்தார். அவர் எடுத்த நிறையப் புகைப்படங்கள் அந்த அரசினால் அழிக்கப்பட்டன. எஞ்சியவைகளில் அவர்களுடைய சரித்திரம் மீதமுள்ளது.

பிரதீபனுடைய கமரா வில்லைகள் மனித அவலங்களைக் காட்சிப்படுத்தலை நோக்கித் திரும்பி இருக்கின்றன. தன்னை எப்போதுமே வளர்த்தெடுக்கின்ற நிலையில் இருக்கின்ற ஒரு கலைஞனை நான் அவருடைய 'இமைகளின் வாயில்' அறிமுகத்தில் காண்கிறேன். அவசர அவசரமாக ஓடும் மனிதர்கள், சந்து பொந்துகளில் ஒழியும் மனிதர்கள் என்று காட்சிப்படுத்துபவை இங்குள்ள இவருடைய புகைப்படங்கள்.

பிரான்சில் நடந்த கண்காட்சியில் இரவு மனிதர்கள்

நடமாடும் இடங்களையும் பெரும்பாலோரால் ‘அருவருப்பானவை’ என்று கருதப்படும் விடயங்களையும் காட்சிப்படுத்தி இருந்தார் என்ற பெருமையும் அவரையே சாரும். இவருடைய பயணம் நன்கமைய வேண்டும். அது இவ்வுலகிற்குப் பயனுள்ளதாக அமைய வேண்டும் இவரை அறிமுகம் செய்து வைத்ததில் பெருமையடைகிறேன்.

### புகலிடச் சஞ்சிகைகள்
### அறிமுகமும் விமர்சனமும்
### தலைமை: இரா. றஜீன்குமார்

றஜீன்குமார்: புகலிடத்தில் வெளிவந்துகொண்டிருந்த சஞ்சிகைகளின் ஆசிரியர்களினதும் எழுத்தாளர்களினதும் வாசகர்களினதும் கலந்துரையாடலுக்கான ஒன்றுகூடற் தளமாகத்தான் இலக்கியச் சந்திப்பு ஆரம்பித்ததே. இப்போது மீண்டும் அது நடப்பதென்பது சந்தோஷமானதும் வரவேற்கத் தக்கதானதுமாகும். சஞ்சிகைகள் என்பது ஊடகங்கள் என்பதற்குள் அடங்கும். ஊடகங்கள் மக்களைக் கொண்டு செல்வதில் மிகமுக்கிய பங்கு வகிக்கின்றன.

1. எல்லாவற்றையும் மறுத்தல்
2. எல்லாவற்றையும் திரித்தல்
3. எதுபற்றியும் ஒன்றும் சொல்லாதிருத்தல்

என்றவாறு இயங்குபவை இவை.

[பேச்சாளர்கள் ஒவ்வொருவரையும் தனக்கேயுரிய பாணியில் அறிமுகம் செய்து வைத்து சஞ்சிகை அறிமுக விமர்சன நிகழ்வை நெறிப்படுத்தினார்]

சஞ்சிகை : உயிர்நிழல் - பிரான்ஸ்
அறிமுகம் : கிருஷ்ணா சுப்ரமண்யா (ஜெர்மனி). இவர் தமிழ்-ஜெர்மன் மொழிபெயர்ப்பாளர். பல கண்காட்சிகளை நடத்திய புகைப்படக் கலைஞர். Political Action என்னும் அமைப்பில் உறுப்பினர்.

கிருஷ்ணா சுப்ரமண்யா: இறுதியாக வெளிவந்த இதழ் பற்றிய விடயங்கள் பற்றிப் பிரதானமாகச் சொல்லலாம். உயிர்நிழல் வித்தியாசமான, கருத்துகள் பரிமாறிக் கொள்ளக்கூடிய ஒரு விவாதத்தளத்திற்கான பத்திரிகை. கலையரசனின் உலகப் பிரச்சினை, இஸ்லாமிய அடிப்படைவாதம், டென்மார்க் கார்ட்டூன், என்பவற்றுடன் மொழிபெயர்ப்புகள் பிரெஞ்சு, நோர்வேஜிய, ஆங்கில மொழிகளில் இருந்து. ஆனால் ஜெர்மனியில் பல மொழிபெயர்ப்பாளர்கள் இருந்தும் ஜெர்மன் மொழியில் இருந்து அதைக் காணமுடியவில்லை என்பது குறையாகத் தெரிகின்றது. முஸ்லிம் இலக்கியம் பற்றிய பௌசரின் கட்டுரை முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. புகலிட நிகழ்வுகள் பற்றிய தொகுப்பு மிகவும் நல்லதொரு விடயமாகப்படுகின்றது.

[உயிர்நிழல் சஞ்சிகை பற்றிய முழு வாசிப்பு இல்லாது விமர்சனம் செய்தது போன்ற உணர்வைத்தான் இந்த விமர்சனக் குறிப்புகள் தோற்றுவித்தன]

சஞ்சிகை: தேசம் - இங்கிலாந்து
அறிமுகம்: அசோக் (பிரான்ஸ்). இவர் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தில் அரசியல் அறிவார்த்த தளத்தின் நகர்வுக்காக ஓய்வின்றி உழைத்துக் கொண்டிருப்பவர்.

அசோக்: இது இருமாத இதழ். சர்வதேச தமிழ்ச் சஞ்சிகை. 1977ம் ஆண்டு தொடக்கம் புகலிட சஞ்சிகையின் வளர்ச்சியினூடாக தேசம் சஞ்சிகையைப் பார்க்கவேண்டும். புகலிடத்தில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் சகல சஞ்சிகைகளும் அரசியல், கலை, கலாச்சார விடயத்தில் ஒரு மாற்றுச் சஞ்சிகை என்றளவில் வெளிவந்துகொண்டிருக்கின்றன. ஆனால் இவற்றை நாம் வாசிக்கின்றபோது மாற்றுச் சஞ்சிகை என்றால் என்ன என்ற கேள்விதான் எழுகின்றது. சஞ்சிகைகள் எல்லாவற்றையும் மாற்றுச் சஞ்சிகை



யாகப் பார்க்கும் ஒரு தவறான போக்கு புகலிடத்தில் காணப்படுகின்றது. மாற்றுச் சஞ்சிகை என்பது அதன் கலாச்சார அரசியல் பின்னணியில் இருந்து பார்க்கப்பட வேண்டும். ஒரு சமூகத்தில் வழமையாக காணப்படுகின்ற அல்லது மலிந்து காணப்படுகின்ற ஒரு பொதுப் போக்கான அரசியல் கலாச்சாரப் பின்னணிகளுக்கு அப்பால், அந்தப் பிற்போக்கான கருத்துகளுக்கப்பால், முற்போக்கான அரசியல், அழகியல், கருத்தியல் சார்ந்த சஞ்சிகை. சஞ்சிகை ஆசிரியர்கள் ஏதோ ஒரு கருத்தியல் வர்க்கப் பின்னணி கொண்டவர்களாக இருக்கிறோம். தேர்வுகள் இவை சார்பானதாகவே இது வரை வெளிவந்துகொண்டிருக்கின்றன. இதில் ஆரோக்கியமானவை பேட்டிகள். பல்வேறு அரசியல்வாதிகளின் பேட்டிகள் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றை இரண்டு விதமாகப் பிரிக்கலாம்.

1. அவர்களுடைய ஆளுமையை வெளிப்படுத்துதல்

2. சமூகத்திற்கும் அவருக்குமான தொடர்புபற்றிய கேள்விகளை எழுப்புதல் - அதனூடாக சமூகத்தின் மீதான அவர்களுடைய அக்கறையை விமர்சனரீதியாக வெளிக் கொணர்தல்

இப்படிப் பார்த்தால் தேசம் சஞ்சிகையில் வெளிவந்த பேட்டிகள் இரண்டாம் வகையைச் சார்ந்தவை.

வன்முறைகளுக்கும் அராஜகத்துக்கும் எதிராகக் குரல் கொடுக்கின்ற பத்திரிகைகள், அதற்குச் சாதகமான விடயங்களைத் தாங்கி வருவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. 'நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே' என்கின்ற போக்கு புகலிடச் சஞ்சிகைகளில் இல்லையென்றே கூறவேண்டும். ஆனால் தேசம் தொடர்ந்து அனைத்து வன்முறைகள், ஒடுக்குமுறைகள் என்பவற்றிற்கு எதிராகத் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருக்கிறது. பத்திரிகையாளருடைய தீர்க்கதரிசனம் என்ன என்பதைச் சுட்டிக் காட்டுவதற்கு, உதாரணமாக, கருணா விடுதலைப் புலிகளில் இருந்து பிரிந்தபோது இருவரும் ஒரே கருத்தியலைச் சார்ந்தவர்களே என்ற கருத்து முன்வைக்கப்பட்டபோது விமர்சனங்களை எதிர்கொண்டது தேசம். இப்போது அது நிதர்சனமாகி இருக்கின்றது. இதுதான் ஒரு பத்திரிகை ஆசிரியனின் தீர்க்கதரிசனம் என்று சொல்லவேண்டும் என்பதை இந்த இடத்தில் முக்கியமாகக் குறிப்பிடுவது அவசியம்.

தேசம் வேறெந்தச் சஞ்சிகைகளையும் விட, முஸ்லிம்கள் தொடர்பான அநேக கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்திருக்கின்றது. விவாதத்திற்குரிய கட்டுரைகள் பல வெளிவந்திருக்கின்றன. முஸ்லிம் என்ற அடையாளம் பற்றிய விவாதங்கள் முன்னெடுக்கப் படவேண்டும். தலித்தியம் பற்றிப் பேசுகின்றபொழுது அது ஒரு கருத்தியலாக அல்லாமல் சாதிச் சங்கங்கள் உருவாக்குவது போன்ற போக்கில் சகல இடங்களிலும் நிகழ்கின்றது.

குறைபாடுகள் என்று பார்த்தால், ஆசிரியரின் தணிக்கை மனோபாவம் கட்டுரையின் முழுவடிவத்தைச் சிதைக்கின்றது. அது படைப்பாளியின் அனுமதியுடன் செய்யப்படுகின்றதா என்பது கேள்வி. இன்று ஆயுத வன்முறையை விட எழுத்து ஊடக வன்முறை மிகவும் பயங்கரமானதாக இருக்கின்றது. இணையத் தளங்கள் தனிநபர் சேறடிப்புகளைச் செய்வது மிகமோசமானதாக இருக்கின்றது. தனிநபருக்கும் அரசியலுக்குமான உறவுகள் பேணப்படவேண்டும். அது அரசியல் சார்ந்தது. இச்சஞ்சிகையிலும் அதேபோல் தனிநபர்கள் பற்றி எந்தவிதமான ஆதாரங்களும் இல்லாமல் சுவாரசியமாக இருக்கின்றதென்பதற்காகவே வெளிவந்திருக்கின்றது. இவற்றை ஆசிரியர் தவிர்ப்பாரானால் இது எதிர்காலத்தில் நல்லதொரு புகலிடச் சஞ்சிகையாக அரசியல் களத்தில் உண்மைகளை வெளிக் கொணரும் ஒரு சஞ்சிகையாக இருக்கும் என்று நம்புகிறேன்.

சஞ்சிகை: மண் - ஜேர்மனி
அறிமுகம்: தனபாலசிங்கம் (பேர்லின்). இவர் வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும் என்பதில் நம்பிக்கை கொண்டவர்.

தனபாலசிங்கம்: இது 90ம் ஆண்டில் இருந்து 17 வருடங்களாக தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. நின்றுபோன பத்திரிகைகள் என்னும்போது 'சரிநிகர்' பத்திரிகைதான் ஞாபகத்திற்கு வருகின்றது. புகலிடத்தில் எத்தனையோ சஞ்சிகைகள் வந்து நின்று போயிருக்கின்றன. சிவராஜா, சௌந்தரராஜன் 'மண்' சஞ்சிகை ஆசிரியர்கள். இதை ஒரு மாற்றுச் சஞ்சிகை என்று சொல்லமுடியாவிட்டாலும் சிறுவர் முதல் பெரியோர்கள்வரை அனைவரும் எழுதும் அனைவரையும் வாசிக்கத் தூண்டும் ஒரு சஞ்சிகையாக ஒரு பொதுத்தளத்தில் இயங்குகின்றது. காத்திரமான எழுத்தாளர்களை உருவாக்குவதற்கான முயற்சியில் உள்ளது என்று 'மண்' சஞ்சிகையைக் கொள்ளலாம். நற்போக்குச் சஞ்சிகையாக இதை நான் காண்கிறேன். ஆசிரியர் தலையங்கங்கள் மிகவும் நன்றாக இருக்கின்றன. இந்த நேரத்தில் நெதர்லாந்தில் இருந்து வெளிவந்து நின்றுபோன 'அஆஇ' சஞ்சிகை ஞாபகத்திற்கு வருகின்றது. அவற்றின் ஆசிரியர் தலையங்கங்களும் இன்றும் மீட்டுப் பார்க்கக்கூடியவை. நேர்த்தியான வடிவமைப்பில் 'மண்' வந்தால் இன்னும் நன்றாக இருக்கும். இதில் தணிக்கைகள் இல்லை. வரித்த பார்வையுடன் தொடர்ந்து வெளிவரும் என்று நம்பலாம்.

[சரிநிகர் இப்போது காலாண்டு சஞ்சிகையாக மீண்டும் வெளிவரத் தொடங்கியுள்ளது.]

சஞ்சிகை: உயிர்மெய் - நோர்வே
அறிமுகம்: உமா (பேர்லின்) இவர் பெண்ணியவாதி, விமர்சகர்.

உமா: இது காலாண்டுப் பெண்கள் சஞ்சிகை. இதை ஒரு அறிமுகமாகவும் ஏற்கனவே வெளிவந்து நின்று போன பெண்கள் சஞ்சிகைகளுடனான ஒப்பீடாகவும் அவற்றிற்கான தனித்துவத்தின் அவசியம் பற்றியும் பார்க்கலாம். எண்பதுகளில் புகலிடத்தில் இருந்து நிறையச் சஞ்சிகைகள் வந்தன. பெரும்பாலும் ஆண்களே (சில சஞ்சிகைகளைத் தவிர) ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள். பெண்கள் பெயரில் ஆண்கள் எழுதி வந்தனர். எண்பதுகளின் பிற்பகுதிகளில் பெண்கள் வட்டம், நமது குரல், கண், சக்தி,

ஊதா. பின்பு 1991ம் ஆண்டில் பெண்கள் சந்திப்பு மலர். இச்சஞ்சிகைகள் நின்று போய் எட்டு வருடங்களிற்குப் பின் 'உயிர்மெய்' இப்போது வந்திருக்கிறது. வெளிப் பார்வையற்று வீட்டின் மூலைகளில் முடங்கிக் கிடக்கும் பெண்களின் கரம்பற்றுவதும் தங்களின் நோக்கமாக ஆசிரியர்கள் தமயந்தியும் பானுபாரதியும் குறிப்பிடு கின்றார்கள். நோர்வே வாழ் பெண்களின் பேட்டிகள் அதிகமாக வெளிவந்திருக்கின்றன. இதுவரை 3 இதழ்கள் வந்திருக்கின்றன. ஐரோப்பிய மனநிலை வெளிப்பாடுகள், சர்வதேசரீதியான பல பெண்களையும் அவர்களின் சாதனைகளையும் வெளிக்கொணரு கின்றது. சமுத்திரனின் கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்நிலை, மற்றும் இலங்கை அரசியலில் நோர்வேயின் பாத்திரம் என்பனவும், சிறுகதைகள் நான்கும்.

சாரங்கா தயானந்தனின் 'சிறகு'. பெண்ணின் நிலை பற்றிய உருவகக்கதை. தமிழ்ப்படங்களில் வருவது போல் படித்தவர்கள், பிராமணர்கள்தான் நல்ல கருத்தைச் சொல்லமுடியும் என்றவாறுதான் பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. பெண்ணொடுக்குமுறை என்பது வர்க்க ரீதியில் வேறுபடுகின்றது என்பதற்கு இக்கதையை உதாரணமாகக் கொள்ளலாம்.

'துன்பம் நேர்கையில்' - 3 தடவைகள் கருக்கலைப்பு. பெண்ணின் உடல்மீதான ஆதிக்கம் எவ்வளவு துாரம் இருக்கின்றதென்பதை மிகவும் இலகுவாகப் புரிந்து கொள்ளும் விதத்தில் எழுதப்பட்டிருக்கின்றது.

சலவை. பெண்களின் உழைப்பு, ஆண்கள் தண்ணிப் பார்ட்டி வைப்பது. 'அம்மா' போன்ற கதைகள் வாசிக்கக் கூடியனவாக இருக்கின்றன.

இதுவரை வந்த சஞ்சிகைகளுடன் ஒப்பிடும்பொழுது பெண்களின் ஒடுக்குமுறை என்பது அபிவிருத்தியடைந்த - அபிவிருத்தியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் (இலங்கை-இந்தியா) போன்ற நாடுகளுக்கிடையில் வேறுபடும். பின் குறிப்பிட்ட நாடுகளில் இருக்கும் பெண்களுக்கு தாங்கள் ஒடுக்கப்பட்டிருக் கிறோம் என்ற விடயமே தெரியாது. இவர்களிற்கு அக விடுதலை முக்கியம். அதாவது, பெண்களின் சஞ்சிகை என்னும் போது இதற்கான பாதையைத் திறந்து விடுவதற்கான முனைப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்று கருது கின்றேன். சீதனம், பொட்டு, தாலி போன்ற பிரச்சினைகளில் இருந்து உடல் மொழி, மொழிப் பிரயோகம், உடல் அரசியல் என்பன நோக்கி நகர்ந்திருக்கின்றன பெண்ணியத்தின் பிரிவுகள். அந்தத் தொடர்ச்சியை 'உயிர்மெய்'யில் காணமுடியவில்லை. ஆக்கதாரர்கள் கூடுதலாக பெண்களின் பெயர்கள் இருக்கின்றன. இது எல்லாமே பெண்கள்தானா என்பது தெரியவில்லை. பெண்கள் சஞ்சிகை எனும்போது பெண்ணியத் தளத்திலான விவாதங்களை கலந்துரையாடல்களை உருவாக்கும் ஒரு சஞ்சிகையாகக் கொண்டு வரவேண்டும் என்று நான் கருதுகின்றேன். தொடர்ந்தும் 'உயிர்மெய்' வெளிவரவேண்டும் என்று விரும்புகிறேன்.

[றஜீன்குமார்: சஞ்சிகை விமர்சனம் என்பது கஷ்டமானது. அதை இங்கு சிறப்பாகச்செய்கின்றார்கள்.]

சஞ்சிகை: வடு- பிரான்ஸ் - மாதச் செய்தி இதழ்
அறிமுகம்: தேவதாசன் (பிரான்ஸ்). இவர் தலித் இலக்கிய அரசியல் ஈடுபாட்டாளரும் மறுத்தோடிகளில் ஒருவருமாவர்.

தேவதாசன்: 'வடு' சாதி ஒடுக்குமுறைக்கும் சாதியத்திற்குமான பிரச்சினைகள் பற்றிப் பேசுகின்றது. மதம், இலக்கியம், தேசியம். சாதியம் போன்ற விடயங்களில் எல்லாரும் ஒளிச்சு விளையாடுவதால், 'இதைப் பிறகு பார்ப்பம்' என்று 30 வருட தமிழ்த் தேசியப் போராட்டத்துக்குள் அமிழ்ந்துபோக. 30வருட அரசியலில் கற்றுக்கொண்ட விடயங்களினால் இப்படியொரு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். இது ஒரு சாதிச் சங்கமாக இருக்காது சமூக விடுதலையை முன்னெடுக்கும் ஒரு அமைப்பாக இருக்கும். எவ்வாறான அரசியற் தீர்வு முன்வைக்கப்பட்டாலும் அது தமிழ்ப்பகுதிகளிடம் கையளிக்கப்பட்டால், காலம்காலமாக பிற்படுத்தப்பட்டவர்கள் குறித்து அவை எதுவும் செய்யப் போவதில்லை. எனவே, அவர்கள் தங்களுடைய பிரச்சினைகளைத் தாங்களே சொல்வதற்கான ஒரு வெளிப்பாட்டு ஊடகம் தேவை என்ற அளவில்தான் அதை இந்த வடு முன்னெடுக்கின்றது. தலித் மக்களுக்கான ஒரு தீர்வுத் திட்டத்தை ஸ்ருட்காட் அரசியல் மாநாட்டில் முன் வைத்தோம். பிரான்ஸில் உள்ள இலங்கை தலித் மேம்பாட்டு முன்னணி என்னும் அமைப்பின் வெளியீடு 'வடு'.

இனி - டென்மார்க்
அறிமுகம்: சுசீந்திரன் (பேர்லின்) இவர் மொழிபெயர்ப்பாளர்- விமர்சகர்- அரசியற் செயற்பாட்டாளர்.

சுசீந்திரன்: சஞ்சிகைகளின்மீதான காரசாரமான விவாதங்கள் நடைபெற்ற அந்த நாட்களை எண்ணிப் பார்க்கிறேன். இலக்கியச் சந்திப்பில் பங்கு கொண்டவர்கள், இதனால் வளர்த்தெடுக்கப்பட்டவர்களில் பலர் இணையத்தளங்களை தங்கள் எழுத்துக்கான தளங்களாக வரித்துக் கொண்டதாலும் தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றின் பல்கிப் பெருகிய தன்மையும் வாசிப்பதற்கான அவகாசத்தை எடுத்துக் கொள்ளுதல் என்பது அருகி வந்திருப்பதை நாம் காணலாம். இவைகளிற்கு அப்பால் தங்களுடைய தன்னார்வத்தினாலோ, மீண்டும் மீண்டும் கைகளைச் சுட்டுக் கொள்வதற்குத் தயாராக இருப்பதனாலோ என்னவோ புகலிடத்தின் பல பாகங்களில் இருந்தும் சஞ்சிகைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பறை, சக்தி, இனி போன்ற சஞ்சிகைகள் எல்லாம் ஒரே A5 வடிவத்தில் இருக்கின்றன. A4 அளவு சஞ்சிகைகள்தான் கூடியளவு நின்று பிடிக்கின்ற தன்மைமாதிரி சிலவேளைகளில் ஒரு மயக்கம். 'இனி'யில் வெளிவருகின்ற விடயங்கள் அறுபதுகளில் தொடங்கி எழுபதுகளில் மூர்க்கம்பெற்ற ஒரு சமூக விடுதலைப் போராட்டத்தின் பங்காளிகளாக இருந்தவர்களினதும் அவர்களினது தொடர்ச்சியைப் பேணுதலுக்குமான ஒரு முயற்சியாகக் கொள்ளலாம். 'இனி'யின் உள்ளடக்கம் எழுபதுகளின் நினைவை மீள் நிறுத்தலை முன்னெடுக்கிறது. சந்துாஷின் ஹென்ரிச் போல் பற்றிய கட்டுரை சிறப்பாக உள்ளது. ஹென்ரிச் போல் முதலாளித்துவத்தின் கொடூரமுகங்கள்,

ஊடகங்களின் ஆளுமை, ஊடகங்களின் அராஜகங்கள் என்பவற்றைத் தனது எழுத்துக்களில் கொண்டு வந்தார். இதனால் இவர் மிகவும் பாதிக்கப்பட்டார். மனிதாபிமான நேர்மைமிக்க பத்திரிகையாளர்.

«எனக்கு எது எது பிடிக்கவில்லையோ, நான் எதை எதை விரும்பவில்லையோ, என்னைப்போல் எதை எதை மற்றவர்களும் விரும்பவில்லையோ, அது இருக்கக் கூடாது என்பதில் நான் எதுவித தவறையும் காண வில்லை» - உல்ரிச் மைனொ∴வ்

வரலாற்றில் இருந்து திட்டமிட்டு மறைக்கப்படுகின்ற விடயங்களையும் சந்துாஷ் போன்ற ஆரவாரமற்ற எழுத்தாளர்களையும் கொண்டு வெளிவரும் இச்சிறு சஞ்சிகைகளை நாங்கள் தொடர்ந்து படிப்பதன் மூலம் அவைகளை ஊக்குவிக்க வேண்டும்.

[பேச்சாளர்களின் உரைகளைத் தொடர்ந்து சபையோர் தங்கள் குறிப்புகளைத் தெரிவித்தனர்]

பரா: அடுத்து வரும் இலக்கியச் சந்திப்புகளில் இணைய சஞ்சிகைகளையும் வானொலி போன்றவற்றையும் விமர்சனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். மொழிக்கும் மதத்திற்கும் இடையில் உள்ள நெருக்கம் தவிர்க்கமுடியாதென்பதும் அதுதான் வரலாறாகவும் இருக்கின்றது.

கிருஷ்ணா: தமிழ்மொழியை இந்துசமயமோ இந்துசமயத்தைத் தமிழ்மொழியோ குத்தகைக்கு எடுக்கவில்லை. உதாரணத்துக்கு, இலங்கையில் உள்ள இலக்கியங்களைப் பார்த்து இது தமிழ் இலக்கியமோ முஸ்லிம் இலக்கியமோ என்று என்னால் வேறுபடுத்திப் பார்க்க முடியவில்லை. முஸ்லிம் படைப்பாளிகளின் எழுத்துக்களை மதப்பின்னணி கொண்டு பார்ப்பது சரியாகப் படவில்லை. இபபோது இங்கு ஜேர்மனியில் இருக்கும் உங்களில் ஒருவர் ஒரு ஜேர்மன் காரரைப் பொல ஒரு ஜேர்மன் இலக்கியம் படைக்கலாம். அதன் எழுத்துப்பின்னணி தெரியாதவரை அது ஜேர்மன் இலக்கியமே. அதேபோல்தான் ஒருவர் தான் வாழும் சூழ்நிலையின் மொழியை உள்வாங்கி அதனைத் தனது மொழியாகக் கொள்கிறார்.

சந்துாஷ்: ஏன் தமிழ்மொழி இந்துசமயத்தின் சொத்தல்ல என்று சொல்லவேண்டி வருகின்றதென்றால், பௌத்தர்களாலும் சமணர்களாலும் தமிழ் வளர்க்கப்



பட்ட காலம் மறக்கடிக்கப்படுகின்றது. இன்றைக்கு, பௌத்தம் தன்னுடைய தனிச்சொத்து என்று சிங்களப் பேரினவாதம் சொல்கின்றது எப்படி எவ்வளவு வெளிப்படையான பொய்யோ அதுபோல்தான் இதுவும்.

மீரா: முருகனையும் ஸ்கந்தனையும் ஒன்றென்று தமிழ்க்கடவுளாக்கிய இந்துசமயத்திடம் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

சுசி: இந்துசமயம் தமிழை எப்போது காவு கொண்டது, 12ம் நூற்றாண்டில். பல்லவர் காலத்தில் இந்து சமயம் மூர்க்கமாகத் தன்னை ஸ்தாபனமயப்படுத்தியது. இலங்கைக்கு இந்துசமயம் வரவில்லை. அங்கு சைவம்தான் வந்தது. கிறிஸ்தவர்களின் அல்லது முஸ்லிம்களின் தமிழுக்கான பங்களிப்பு என்று பேசுவதே அபத்தமானது. இப்படி இந்துத்துவவாதிகளால்

தேவதாசன்: 'உயிர்நிழல்' விமர்சனத்தின்போது இந்துத்துவத்திற்கும் தமிழுக்கும் தொடர்பில்லை என்றவாறு பேசினார் கிருஷ்ணா. தமிழ்மொழி என்பது இந்துத்துவத்தில் கரைந்துவிட்டது என்பதை நாங்கள் மறைத்துவிட முடியாது. இந்துத்துவத்திற்குள் போய் தமிழ்மொழி தன்னை அழித்துக்கொண்டதால்தான் இன்று நாங்கள் இங்கு புலம்பெயர்ந்து வாழ்வதன் ஒரு குறிப்பிட்ட காரணமுமாகும்.

அசோக்: கலாச்சாரத்துக்கும் மொழிக்குமான உறவு மிகவும் நெருக்கமானது. தமிழ்க் கலாச்சாரம் என்பது இந்துத்துவக் கலாச்சாரம். கலாச்சாரத்தில் இருந்துதான் மொழி கட்டமைக்கப்படுகிறது. எனவே மொழி அந்தக் கலாச்சாரத்தை உள்வாங்கித் தன்னைத் தகவமைத்துக் கொள்வது தவிர்க்க முடியாதது.

மட்டும்தான் சொல்ல முடியும். அவர்களின் மொழி தமிழ். இலங்கையில் நடக்கின்ற சிறுபான்மை இனங்களின் மீதான தாக்குதல் விளைவுகள் ஏற்படுத்திய தமிழ்த் தலைமைகளிடம் நாங்கள் எல்லாவற்றையும் காவு கொடுத்துவிட்டு வீணே இருத்தல் அல்லது அவைகள் எதார்த்தமானவை என்ற நிலைப்பாட்டில் இயங்குதல் என்பனவற்றிலான தவறுதான் இது என்பது குறிக்கப்பட வேண்டியது.

கலையரசன்: டென்மார்க் கேலிச்சித்திரம் பற்றி நிறையக் கேள்விகளை கிருஷ்ணா எழுப்பி இருந்தீர்கள். கட்டுரையில் உங்களுக்குத் தெளிவின்மை இருப்பதாகத்தான் நான் நினைக்கிறேன். ஏனென்றால் ஒரே கட்டுரையிலேயே நீங்கள் எழுப்பிய சந்தேகங்களிற்குப் பதில் இருக்கின்றது. என்ன பிரச்சினையென்றால், கருத்துச் சுதந்திரம் என்ற அடிப்படையில் இனவாதம் பேசுவதை அனுமதிக்க முடியாது. எல்லா மதத்திலும் குறைபாடுகள் இருக்கின்றன. அதை விமர்சனரீதியாக முன்வைக்காமல் குறிப்பிட்ட மதத்தைத் தாக்குவது போன்ற நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை. இஸ்லாமியர்களிற்கு ஆதரவாக மனிதாபிமானரீதியில் கதைக்கும் போது அவர்களை இஸ்லாமிய அடிப்படைவாதிகள் என்று சொல்வது எப்படி இருக்கின்றதென்றால் தமிழர்களின் உரிமை பற்றிக் கதைக்கும் சிங்களவர்களை 'புலிகள்' என்று சொல்வது போலத்தான்.

கிருஷ்ணா: மிஷல் ஹலபெக் என்னும் பிரெஞ்சு எழுத்தாளர் ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் இஸ்லாமிய மதம் என்பது ஒரு பின்தங்கிய சமயம் என்று பப்ளிக்காகச் சொன்னார். அதுவரையும் அவரை உச்சத்தில் கொண்டாடிய பெரும் பத்திரிகைகள் (Le monde, Die Sie) இப்போது அவருடைய எழுத்துக்களை வாபஸ் வாங்கத் தொடங்கி இருக்கிறார்கள்.

உமா: தமிழும் இந்துத்துவமும் ஒன்று என்பது தமிழ் கற்பிக்கப்படும்போதே போதிக்கப்படுகின்றது.

சிவராஜா: தமிழ் எழுத்தாளர்களின் அடையாளங்கள் அழிந்துவிடக்கூடாதென்ற நோக்கில் ஜேர்மன்-தமிழ் எழுத்தாளர்கள் சங்கம், 24 எழுத்தாளர்கள் மட்டும் அடங்கிய ஒரு விபரத்திரட்டு வெளியிடப்பட்டுள்ளது. பலரைத் தொடர்பு கொண்டும் ஏதோ ஒரு காரணத்தினால் அவர்கள் தங்கள் விபரங்களைத் தந்து ஒத்துழைக்கவில்லை. என். செல்வராஜா (இலண்டன்), புண்ணியாமீன் (இலங்கை) ஆகியோரின் உதவியுடன் இதைச் சென்ற ஆண்டு வெளியிட்டோம். புண்ணியா மீன் எழுத்தாளர்களைத் தொடர்பு கொண்டு 25 பேர் கொண்ட தொகுப்பொன்றை வெளியிட்டிருக்கின்றார்.

### ஹஸன் மண்டோ படைப்புகள்
### பொ. கருணாகரமூர்த்தி (பேர்லின்)
### தலைமை: இரா. றஜீன்குமார்

பொ. கருணாகரமூர்த்தி: சாதத் ஹஸன் மண்டோ 11.05.1912இல் பஞ்சாப்பிலுள்ள லுதியானாவில் பிறந்து தனது 43வது வயதில் ஈரல் கருகி இறந்து போகிறார். தன்னைப் பற்றி அவர் இப்படி ஒரு முறை எழுதுகிறார்: "சாதத் ஹசன் ஒரு நாள் இறந்து விடுவான். ஆனால் மண்டோ எப்போதும் சாக மாட்டான்"

இவர் தனது வார்த்தைகளில், "என்னுடைய கதைகளை அழுக்கென நீங்கள் கண்டீர்கள் என்றால் நீங்கள் வாழும் சமூகம் அழுக்காக இருக்கின்றதென்பதுதான் அது. என்னுடைய கதைகளினூடு நான் உண்மையை மட்டுமே வெளிக்காட்டுகின்றேன்"

இவர் 20ம் நூற்றாண்டின் பிரபல்யமான உருது சிறுகதை எழுத்தாளராக இருந்தார். இவர் ஒரு பத்திரிகையாளர். விமர்சகர். திரைப்பட வசனகர்த்தா. இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது அகில இந்திய வானொலிக்காக வேலை செய்தார். தன்னுடைய 20வருட கால எழுத்துத்துறையில் 22 சிறுகதைத் தொகுப்புகளையும், 7 வானொலி நாடகத் தொகுப்புகள், மூன்று கட்டுரைத் தொகுப்புகள், ஒரு நாடகம் என்று பிரசுரித்திருந்தார். பெரும்பாலானவை திரைப்படங்களாகவும் நாடகமாகவும் பரிணமித்திருக்கின்றன.

மாண்டோ கலகக்காரராக இருந்தார். விளிம்பு நிலை மக்கள், பாலியல் தொழிலாளிகள், நெதியா - பாகிஸ்தான் பிரிவினையினால் பாதிக்கப்பட்ட பெண்கள், குழந்தைகள் பற்றி எழுதினார்.

சமூகத்தின் அழுக்குகளுக்குள் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை நாங்கள் உணர்ந்து கொள்ளும்போது மண்டோவின் கதைகளை வாசிப்பதற்கு இயல்பாகவே ஒரு துாண்டலைப் பெறுவோம்.

இவருடைய இறப்புப்பற்றி நெருங்கிய நண்பனும் கவிஞனுமான ஹமீட் ஜவால் இப்படிக் கூறுகிறான். "மாண்டோ உன்னுடைய தவறுகளிலேயே மிகமோசமான தவறு நீ மரணித்ததுதான்"

இந்த வாசகங்களுடன் தானும் இணைந்து போவதாகக்கூறி தனது அறிமுகத்தை முடித்துக் கொண்டார்.

ஓரிரு கதைகளை வாசித்துக் காட்டி அக்கதைகளுடனான தன்னுடைய அனுபவத்தைப் பகிர்ந்தார்.

குறிப்பு: இந் நூலில் நிறைய எழுத்து, வசனப் பிழைகள் இருக்கின்றன.

[மண்டோவின் கதைகள் தமிழ்ச் சூழலில் அனைவரின் வாசிப்புக்குட்படவேண்டும் என்பதும் இந்தப் படைப்புகள் இன்னும் ஆழமான பக்கங்களைத் தொட்டுச் சென்றிருக்கலாமோ என்ற எண்ணம் இறுதியில் எஞ்சி நின்றதை பலர் உணர்ந்திருப்பர்]

### முஸ்லிம்கள்
### தமிழ் இலக்கியத்துக்குச் செய்த பங்களிப்பு
### றவூப் எம். காஸிம் (நோர்வே)
### தலைமை: ந. சுசீந்திரன் (பேர்லின்)

(இவருடைய பேச்சின் முக்கிய பகுதி. இங்கு தனியே பிரசுரமாகிறது. பக்----)

இவருடைய பேச்சுக்குப் பின்னான பார்வைகள் பின்வருமாறு:

பரா: 317தமிழர்களை கொழும்பில் இருந்து வெளியேற்றும்போது சுப்ரீம் கோட்வரை சென்று அவர்கள் அந்த இடங்களிற்குத் திரும்ப வருவது சாத்திய

மாயிற்று. ஆனால் 80 இலட்சம் முஸ்லிம் குடும்பங்கள் இன்று 17 வருடங்களாக தங்கள் இருப்பிடங்களில் இருந்து துரத்தப்பட்டு மீளக் குடியமர்த்தப்படாமல் இருப்பதுபற்றி ஏன் நாங்கள் இன்னும் சுப்ரீம் கோட்டில் வழக்குத் தாக்குதல் செய்யாமல் இருக்கின்றோம் என்பது முக்கியமான கேள்வியாகின்றது.

றவூப்: 17 வருடங்களாக இவர்கள் இன்னும் வாக்குரிமையோ வேலைவாய்ப்புக்களோ இல்லாதிருக்கின்றார்கள். ஏனென்றால் அவர்கள் இருக்குமிடத்தில் 44% முஸ்லிம் 44% சிங்களம் 12% தமிழ்.

கிருஷ்ணா: நீங்கள் சரித்திரத்தில் பாரதூரமாக ஏற்பட்டிருக்கும் இந்த இனச் சுத்திகரிப்பை (வடபுல முஸ்லிம்களின் வெளியேற்றத்தை) இப்படி நகைச் சுவையாகச் சொல்வது மனச் சங்கடமாக இருக்கிறது. மார்டடின் லூதர் கிங் சொன்னது போல எனக்கும் ஒரு கனவு இருக்கிறது. "யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மீண்டும் அங்கு வந்து குடியேறவேண்டும். அங்கு அவர்களின் பாங்கோசை கேட்க வேண்டும்"



முரளி: யாழ்ப்பாணத்தில் தமிழ் வளர்த்துக் கொண்டிருக்கிற அறிவுஜீவிகள்பற்றிய விமர்சனக்குறிப்புகள் மிகவும் தீவிரமானதாக இருக்க வேண்டும். அவர்களிற்கு நகைச்சுவையோ இரட்டை அர்த்தங்களோ விளங்காது. தமிழ்த் தேசியம் பேசிய, தமிழ் வளர்த்த யாழ்ப்பாணத்தார் எல்லோரும் நல்ல உதாரணங்களாக எங்களுக்கு இருக்கிறார்கள். முஸ்லிம் மக்களைப் பற்றி எழுதிய ஜெயபாலனோ, சிவத்தம்பியோ, சேரனோ, சிவசேகரமோ என்று, எனவே இவர்களை மிகவும் தீவிரமாக விமர்சனத்தில் அணுகவேண்டும்.

பஷீர்: பரா சொன்னதுடன் நானும் உடன்படுகிறேன். இந்த இடத்தில் பாரதியின் கவிதையொன்று ஞாபகத்திற்கு வருகின்றது. பாஞ்சாலியின் துகிலுரியப்பட்ட போது சுற்றிவர நின்று வேடிக்கை பாரத்தவர்களை 'நெட்ட நெடு மரங்கள்' என்று விழிக்கின்றார். அந்த அந்த மனச்சாட்சி இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று சொல்லத் தோன்றுகின்றது.

சுசி: 1981ம் ஆண்டு யாழ். நூலகம் எரிக்கப்பட்ட போது 'புத்தரின் கண்ணீர்' என்ற முதல் கவிதை எம். ஏ. நுஹ்மானிடம் இருந்துதான் பிறந்தது. இன்று தமிழ் உலகத்தை ஆக்கிரமித்திருக்கின்ற புதுக்கவிதை வடிவத்தை மு. மேத்தா அறிமுகப்படுத்தியபோது, தலையில் வைத்துக் கொண்டாடியபோது, அதற்கு எதிர் விமர்சனமாற்றி இலங்கையின் கவிதைப் பாரம்பர்யத்தைத் தக்க வைத்துக் கொண்டவரும் எம். ஏ. நுஹ்மான் தான்.

போர்த்துக்கீசரின் வருகைக்கு முன், பின் முஸ்லிம்கள்மீது கொடூரமிழைக்கப்பட்டபோது கண்டிய மன்னன் அங்கு வருமாறு கோரி அவர்களைக் குடியேற்றுகிறான். வடக்கில் இருந்து முஸ்லிம்கள் துரத்தப்பட்டதற்கு மன்னிப்புக் கேட்பதும், அவர்களை மீளக் குடியமர்த்தி அவர்களுடைய சகல கௌரவத்துடனும் அழைக்கப்படாதவரைக்கும் அவர்களுடைய போராட்டம் தொடரும் என்பதும் அவர்கள் எந்த மலினத்துக்கும் விலைபோகமாட்டார்கள் என்பதும் அவர்களுடைய வெளிப்பாடுகளில் இருந்து தெரிய வருகின்றது.

### புகலிடத்தில் இரண்டாம் தலைமுறையினரின் அடையாளத் தேடலும் தமிழ்ச் சமூகமும்

**மீரா & காருண்யா (பேர்லின்)**

**தலைமை: ந. சுசீந்திரன்**

மீரா: அடையாளம் என்பதன் பொது வரைவு, இடம்பெயர்ந்த மக்களுடைய அடையாளம்.

அடையாளம் என்பது சிக்கலான உள்ளடக்கத்தைக் கொண்டது. அடையாள விருத்தி என்பது ஒரு படிமுறையான வளர்ச்சி. இது ஒருவருக்கு அதனுடைய வாழ் சூழல், சமூகம், பாடசாலை என்பவற்றிற்கிடையில் நடைபெறும் பரிவர்த்தனையில் உருவாகும் வளர்ச்சிப் படிமுறை.

குடும்பச் சூழலுக்கு வெளியே இவர்கள் பல விதமான சமூகங்கள், வாழ்க்கைப் போக்குகள் என்பவற்றோடு பரிவர்த்தனைகளைப் பேணிக் கொள்ள நிர்ப்பந்தமாகும் அதேவேளை குடும்பச் சூழலில் ஒரே விதமான மாற்றங்களற்ற கலாச்சாரக் கட்டமைப்புக்களை உள்வாங்க நிர்ப்பந்தமாகின்றது.

தங்களுடைய சமூகத்திற்கும் வந்து சேர்ந்திருக்கின்ற சமூகத்திற்கும் இடையில் ஊசலாடும் நிலை அல்லது ஸ்திரப்படுத்தப்படாத நிலை என்பது ஒரு நல்ல விடயமாக ஜேர்மானிய சமூகத்தினால் பார்க்கப்படுவதில்லை. புதிய சூழலை அடையாளம் காண்பதுவும் ஒரு வளர்ச்சிப்படிமுறையும் ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கானது. அதற்கான ஒரு புதிய வெளியை உருவாக்குவது.

ஏன் அந்தப் புதிய வெளிதேவை எனில், புலம்பெயர் சூழலில் ஒருவர் தனது பெற்றோருடைய பின்னணியிலான அடையாளமும் இல்லாமல் புலம்பெயர்ந்திருக்கும் சமூகத்தினதும் அடையாளமும் இல்லாமல்

அது ஒரு புதிய இனம் என்றுதான் சொல்லவேண்டும். இது தனியே தமிழ் சமூகத்தை மட்டும் குறிப்பதல்ல. இங்கு எங்களைப்போல் வேறுநாடுகளில் இருந்து வந்த புலம்பெயர் சமூகத்தவர்களும் இருக்கின்றார்கள். அவர்களுக்கும் இப்படியான அடையாளப் பிரச்சினை இருக்கின்றது. எனவே இந்த அடிப்படையில் நாங்கள் அதனது இந்தப் புலம்பெயர் சமூகங்களில் இருக்கும் வளரிளம் பருவத்தினர் அனைவரும் ஒரு புதிய இனம், ஒரு புதிய வெளி என்ற அடிப்படைக்குள் வந்து சேர்கி றார்கள். Transcultural elements.

இடம்பெயர் சமூகம் என்றால் என்ன?

'Diaspora' என்னும் பதம் ஆரம்பத்தில் பரதேச மெங்கும் சிதறி வாழ்ந்த யூதமக்களினைக் குறிப்ப தற்காக பாவிக்கப்பட்ட சொல். அது இன்று, தங்கள் நாட்டிற்குத் திரும்பிப் போகலாம் என்ற தொடர்ந்த கனவுடன் வாழும் இடம்பெயர் சமூகங்களைக் குறிப்ப தற்குப் பரவலாகப் பாவிக்கப்படுகின்றது.

'நாட்டுக்கு மீளத் திரும்புதல்' என்னும் அவா மிகவும் முக்கியமான விடயம்.

ஏனென்றால் இது புலம்பெயர்ந்திருக்கும் ஒரு இளைஞருக்கு இங்கு அவருக்கு முன் வழங்கப்பட்டி ருக்கும் சகல சந்தர்ப்பங்களையும் பயன்படுத்துதல் என்னும் நடைமுறைக்கு இந்த மீளத் திரும்புதல் என்னும் கனவை ஞாபகப் படுத்திக் கொண்டிருப்பது ஒரு தடையாக இருக்கின்றது. (அதாவது வாழிட நிரந்தர மின்மை)

தமிழ்க் கலாச்சாரம் தனக்கான எல்லைகளை வைத்திருக்கின்றது. அதேபோல்தான் ஜேர்மன் கலாச்சாரமும். ஜேர்மன் கலாச்சாரம் எதை எதிர்பார்க் கின்றதென்றால், நீங்கள் இடையில் நிற்கமுடியா தென்று. எப்படியென்றாலும் தங்கள் கலாச்சாரத்தினை முழுமையாக உள்வாங்கிக் கொண்டு அதில் கரைந்து போவதைத்தான். இங்கு புலம்பெயர்சூழலில் உருவாக் கப்பட்டிருக்கும் இந்தச் சமூகம் என்னமாதிரி இருக்க வேண்டும் என்பதுபற்றி elites ஒரு முடிவுக்கு வர வேண்டும். இந்த இளம் தலைமுறை இங்குதான் வாழப் போகின்றது என்னும் உண்மையைப் பெற்றோரும் இந்தத் தலைமுறையும் திட்டவட்டமாக நம்பி அதற் கான செயற்பாடுகளிலும் தங்களது உரிமைகளிற்கான போராட்டத்திலும் ஈடுபடவேண்டும்.

[இந்நிகழ்வில் மீராவின் தத்துவார்த்த விளக் கங்கள், அவை தொடைக் கணித வரைபுகள் கொண்ட காட்சியாக்கல் உதவியுடன் செய்யப் பட்டமை , புரிதலின் சிக்கல் தன்மையினை பெருமளவு நீக்கியிருந்தது.]

புகலிடத்தில் வாழும் இளம் தலைமுறையினரின் வாழக்கை நடைமுறை பற்றி காருண்யா பேசினார்.

காருண்யா: புகலிடத்தில் பெற்றோரின் வாழ்க்கை முறைக்கும் இளைஞர்களின் வாழ்க்கைமுறைக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் என்பது பற்றி நான் எனது கருத்துக்களைக் கூறுகிறேன். வழக்கமாக மேடைகளில், கூட்டங்களில் பேசுவதென்றால் பெற் றாரோ அல்லது தமிழ் ஆசிரியரோ அதைத் தயாரித்துத் தருவார்கள். அதைப் பாடமாக்கி நன்றாகப் பேசுவேன். இம்முறை அது சாத்தியப்படவில்லை. ஏனென்றால் நான் இது குறித்து அவர்களை அணுகியபோது அவர்களது உதவி கிட்டவில்லை. நான் இங்குள்ள இளம் தலைமுறையினரின் பிரச்சினை பற்றிப் பேசப் போகின்றேன் என்று கூறியபொழுது அவர்கள் கேட்டார் கள் உனக்கென்ன பிரச்சினை என்று. அவர்களுடைய கேள்வித் தொடுப்புகளில் எனக்கிருக்கும் பிரச்சி னையே மறந்து போனது.

பெற்றோருடைய சமுதாயத்திற்கும் இளம் சமுதா யத்திற்கும் இடையில் கருத்துப் பரிமாற்றம் என்பது மிகக் குறைவு. கருத்துப் பரிமாற்றத்திற்கு முதல் தடையாக மொழி உள்ளது. பெற்றோர்கள் தமிழையே பேசிக் கொண்டிருக்க, இளம் தலைமுறையினர் தாங் கள் புலம்பெயர்ந்துள்ள நாட்டு மொழியைத் தங்கள் மொழியாகக் கொண்டிருப்பது. தங்கள் உணர்வுகளை, சிந்தனைகளை அந்த மொழிகளில்தான் இளைஞர் களால் வெளிப்படுத்த முடிகின்றது. இதில் இன்னும் ஒரு விடயம் என்னவெனில் பெற்றோர்கள் ஏதாவது தமிழில் சொல்லும்போது எங்களுக்கு விளங்காவிடில் நாங்கள் அதனைத் திருப்பிச் சொல்லும்படி கேட்போம். ஆனால் நாங்கள் எதையாவது பெற்றோருடன் பேசும்போது அவர்களுக்கு விளங்காவிடில் அவர்கள் தங்களுக்கு விளங்கவில்லை என்று சொல்லமாட்டார்கள். என்ன சொல்ல வருகின்றோம் என்ற சிரத்தையும் அவர் களுக்குக் கிடையாது. அப்போது, "இப்பிடி அப்பா அம்மாவுக்கு எதிராக வாய் காட்டக் கூடாது" என்று சொல்லிவிட்டு அவர்கள் பாட்டுக்குச் சென்றுவிடு வார்கள். எங்களுக்கும் பெற்றோருக்கும் இடையில் இந்த மொழிபற்றிய பரிமாற்றம் எப்போது வரும் என்றால், டொக்டரிடம் போகவேண்டும் அல்லது ஒரு அலுவல கத்துக்குக் கடிதம் எழுதவேண்டும் என்றால் மட்டும் தான். அப்போது வருவார்கள் "இதை ஒருக்கால் செய்துதா மகளே" என்று.

உடைகள் தெரிவு, நண்பர்கள் தெரிவு என்று எல்லாமே வித்தியாசமாக இருக்கும். 16 வயது வரையும் இரண்டு விதமான நண்பர்கள் கூட்டம் இருந்தது. ஒன்று தமிழ் நண்பர்கள். மற்றது ஏனைய சமூகங்களைச் சேர்ந்த நண்பர்கள். இப்படி இருக்கும்போது ஒரு பிறந்தநாளையே மூன்று தடவைகள் கொண்டாடி இருக்கிறேன். 1. பாடசாலை நண்பர்கள் 2. வெளி நண்பர்கள் 3. தமிழ் முறைப்படி வீட்டில் தமிழ்முறை என்றால் தெரியும்தானே. கேக் வெட்டுவது, சாப்பிடுவது. காசு கிடைக்கும். காசை வேண்டி அம்மாவிடம் கொடுப் பது. அது எங்களுக்குக் கிடைக்காது. (தயவுசெய்து ஒருவரும் காசு குடுக்க வேண்டாம். அது பிள்ளை களுக்குப் போய்ச் சேராது)

நீங்கள் சிறீலங்காவில் இருந்தபோது உங்களுக்கு இப்படி ஒரு பிரச்சினை இருந்திருக்க முடியாது. ஏனெ னில் உங்களுக்கிருந்த நண்பர்கள் எல்லாரும் தமிழர் கள். எனவே ஒரு தடவைதான் நீங்கள் பிறந்தநாள் கொண்டாடி இருப்பீர்கள். எனவே இங்கு இந்தத் தலை முறை இடைவெளிகள் வித்தியாசங்கள் நிறைய இருக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்; உணர்ந்துகொள்ள வேண்டும்.

புகலிடத்தில் வாழும் இளைஞர்களை ஆண்- பெண் என்று பிரிக்கிறேன். ஏனெனில் இதிலும் வளர்ப்பில் வித்தியாசம் உண்டு.

உதாரணத்திற்கு, ஆண் இளைஞர்கள் இங்குள்ள சமுதாயத்துடன் assimilate பண்ணக் கூடிய விதத்தில் தான் வளர்க்கப்படுகின்றார்கள். பெண் இளைஞர்களை எடுத்தால் நிறையப் பிரச்சினைகள். உதாரணத்திற்கு, ஒரு நாள் நான் எனது நண்பி ஒருத்தியுடனும் அவருடைய அம்மாவுடனும் ட்ரெயினில் போய்க் கொண்டிருக்கிறோம். அப்போது நண்பி சொல்கின்றார் தனக்கு கணக்குப் பாடத்தில் ஒரு சந்தேகம், அதற்காக தன் நண்பி ஒருத்தியின் வீட்டிற்குப் போகவேண்டும் என்று. அப்போது அம்மா சொல்கின்றா, தனக்கு நேரமில்லை. அதனால் இப்போது போகமுடியாது என்று. நண்பியின் விருப்பத்திற்கும் அந்த அம்மாவின் பதிலுக்கும் என்ன தொடர்பு என்று எனக்கு அந்த நேரம் விளங்கவில்லை. பிறகுதான், அவளுடைய அம்மா அவளை எங்கு சென்றாலும் கூட்டிக்கொண்டு போய்வருவார் என்று தெரிந்தது. அவளுடைய அம்மாவுக்கு நேரம் இல்லை என்றால் அவள் கணிதப்பாடம் படிக்க முடியாது.

பெண்பிள்ளைகள் வெளியே போனால், இரவு 9 மணிக்கு முதல் வீட்டிற்கு வந்துவிடவேண்டும். எப்போதும் கையில் handy வைத்திருப்பார்கள், அவர்கள் எங்கே நிற்கிறார்கள் என்பதைப் பெற்றோர்கள் அடிக்கடி தெரிந்துகொள்வதற்கு.

பெண் இளைஞர்கள், கண்ணுக்குத் தெரியாத 'ஆட்கள்' எனப்படும் அமைப்புக்காக வாழ்கிறார்கள். அதாவது, பெற்றோர்கள் எப்போதும் நாங்கள் எதைச் செய்தாலும் 'ஆட்கள்' என்ன நினைப்பினம், 'ஆட்கள்' என்ன சொல்லுவினம் என்று திருப்பித் திருப்பிச் சொல்வார்கள். இங்கிருக்கும் சமுதாயம் என்ன சொல்கின்றது, ஒரு தனிமனிதராக ஒருவர் எதையும் செய்யலாம், மற்றவருக்குத் தீங்கு விளைவிக்காத வகையில். எங்கள் தமிழ்ச் சமுதாயமானது ஏற்கனவே சரி பிழைகளைப் பட்டியல் போட்டு வைத்திருக்கின்றது. அந்தச் சரி பிழைகளுக்குள் சரிப்பட்டு ஒருவர் வாழவேண்டும் என்று நிர்ப்பந்திக்கின்றது. பெற்றோருடன் எத்தனையோ விவாதங்கள் நடந்திருக்கின்றது. அவற்றின் இறுதியில் தீர்ப்பாக ஒரு வசனம் இருக்கும். 'நீ உனக்கு மட்டும் வாழவில்லை. சமுதாயத்திற்கும் சேர்த்துத்தான் வாழுகின்றாய்' என்று. தனக்கு மட்டும் வாழாமல் 'ஆட்கள்' என்ற அமைப்புக்கும் சேர்ந்து வாழுதல் சரியான பாரம். அந்தப் பாரத்தைச் சுமப்பது சரியான கஷ்டம். இந்தச் சிந்தனைகள் ஐரோப்பிய சமுதாயத்திலும் இருந்திருக்கின்றது. அது குறைந்தது ஒரு 50 வருடங்களிற்கு முதலே இல்லாமற் போய் விட்டது.

இந்த வித்தியாசங்களுக்கிடையில், இரண்டு பண்பாடுகளுக்கிடையில் நாங்கள் வாழ்கின்றோம் என்பதை பெற்றோருடைய சமுதாயம் விளங்கிக் கொள்ளவேண்டும். இந்த இரண்டு பண்பாடுகளுக்கிடையில் வாழ்வதற்கு ஒரு திறமை வேண்டும். அந்தத் திறமையைப்பற்றி ஒரு ஆராய்ச்சியாளர் எழுதி இருக்கின்றார். ஒரு பண்பாட்டில் இருந்து இன்னொரு புதுப்பண்பாட்டிற்குச் செல்லும்போது 5 கட்டங்களைத் தாண்டித்தான் முழுமையாக மறு சமுதாயத்திற்குள் கரைய முடியும் என்று.

1. Honeymoon phase. தேன்நிலவுக் கட்டம். இந்த இடத்தில் புதிதாக எதைக் கண்டாலும் exciting ஆக இருக்கின்றது.

2. Rejection phase. வெறுத்தொதுக்குதல். எம் பண்பாடே மேலானது என்னும் எண்ணம்.

3. Regression phase. பின்நோக்கிச் செல்லும் கட்டம். இங்கு நாட்டுக்குத் திரும்பிச் செல்லுதல் எனும் எண்ணம் முதன்மையாகிறது. இது ஒரு நோயாகிறது.

4. நோய் குணமாகும் கட்டம். மீண்டும் அக்கலாச்சாரத்தில் உள்ள உங்களுக்குப் பிடித்த விடயங்களை ஏற்றுக்கொள்ளத் தொடங்குகிறீர்கள்.

5. 100% assimilate பண்ணிவிடுதல்

இந்த கட்டங்களைத் தாண்டுதற்கிடையில் ஊசலாட்டங்கள் எந்தக் கட்டத்திலும் நிகழக்கூடும்.

பல் கலாச்சாரத்துடன் இணைந்து வாழக்கூடிய திறமையுள்ள மனிதனுக்கு பல பண்புகள் தேவை.

1. தான் என்னென்ன கொள்கைகள் வைத்திருக்



கின்றேன் என்றும் தன்னம்பிக்கையுடன் சரி பிழைகள் சொல்லக்கூடிய தெளிவும் தேவை.

2. பண்பாடுகளிற்கிடையில் வித்தியாசங்கள் இருக்கின்றன என்பதும் அவை என்ன என்பதும் தெரிந்திருக்க வேண்டும்

3. வித்தியாசங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் [காருண்யாவின் சரளமான தமிழ் நடை இந்த தத்துவப்பார்வைகளுக்கான நடைமுறை மற்றும் சுய அனுபவங்களின் வகைமாதிரிகைகளை இயல்பான நகைச்சுவையோடு அறிய முடிந்தது.]

இதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் மிகவும் விரிவாகவும் மிகுந்த ஆர்வத்துடனும் நடைபெற்றது. பொதுவாக அனைவருமே இவர்களின் சரளமான சிநேகபூர்வமான பேச்சுநடையையும் அதேசமயம் தெளிவான வாதங்களையும் பற்றி மனப்பூர்வமாகவே பெருமைப்பட்டுக்கொண்டார்கள். இந்நிகழ்வை இவ்விலக்கியச் சந்திப்பின் சிறப்பம்சம் என்று கூறுதல் மனம்கொள்ளத்தக்கது.

### அக்டோபர் புரட்சி - எழுச்சியும் வீழ்ச்சியும்
### யோகரட்ணம் (பிரான்ஸ்)
### தலைமை: தேவதாசன் (பிரான்ஸ்)

யோகரட்ணம்: பல நூறு ஆண்டுகளாக மனிதர்களாகவே மதிக்கப்படாத தலித்துக்கள் 1910ம் ஆண்டிலிருந்தே வடபகுதி தொழிலாளர் சங்கம் மூலம் தமது உரிமைக்காக ஸ்தாபன ரீதியாகப் போராட முற்பட்டனர். இக்காலப்பகுதியில் ஆங்கிலேய மிஷனெரியால் ஆரம்பிக்கப்பட்ட வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஜேக்கப் காந்தி என்னும் தலித் மாணவன் அக்கல்லூரியில் அனுமதி கேட்டபோது யாழ்ப்பாண 'உயர்' சாதி மாணவர்கள் பாடசாலையை பகிஷ்கரித்து போராட்டம் நடத்தினர். ஜேக்கப் காந்தியும் சளைக்காமல் தனது கல்லூரி அனுமதிக்கான போராட்டத்தை நடத்தியதனாலும், அப்பாடசாலையில் அதிபராக நியமிக்கப்பட்டிருந்த ஆங்கிலேய பாதிரியாரின் மனிதாபிமான முன்னெடுப்புமே, ஜேக்கப் காந்தி அப்பாடசாலையில் யாழ்ப்பாண வரலாற்றில் முதல் தலித் மாணவனாக அனுமதிக்கப்பட்ட நிகழ்வு சாத்தியமானது.

சிறிய சிறிய போராட்டங்களாக ஆரம்பித்து படிப்படியாக தலித் மக்களுக்கான விழிப்புணர்ச்சி வளர ஆரம்பித்தது. 1927ம் ஆண்டு யோவே போல் என்பவரால் ஒடுக்கப்படும் தமிழ் ஊழியர் சங்கம் என்னும் ஸ்தாபனம் அமைக்கப்பட்டு, தலித் மக்கள் மத்தியில் சமூக விடுதலையின் அவசியத்தை உணர்த்துமுகமாக 'சன தர்மபோதினி' எனும் பத்திரிகையும் ஆரம்பிக்கப்பட்டது. 1928இல் சேர் பொன். இராமநாதன் சாதி அமைப்பு முறைப் பாடசாலைகள் கொண்டுவரவேண்டும் எனக் கோரினார். கோப்பாய் அரசினர் பயிற்சிக் கலாசாலையை 'உயர்' சாதியினரின் தனி ஸ்தாபனமாக ஆக்குமாறு மனுக்கொடுத்தார்.

இவற்றை எதிர்த்து நின்று யோவேபோல் உறுதியான போராட்டத்தை முன்னெடுத்தார். 1930களில் தலித்துகள் கல்விகற்ற 13 பாடசாலைகள் 'உயர்' சாதியினரால் எரிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வில்லூன்றி மயானத்தில் தலித் பெண் ஒருவரின் உடல் எரிக்கப்பட வேண்டுமென தலித் துகள் மேற்கொண்ட போராட்டத்தில் அவ்வுடலை எரிக்க விடாது சாதிவெறியர்கள் தடுத்தனர். அந்நிகழ்வானது பெரும் கலவரமாகத் தோற்றம் பெற்று அதில் 'உயர்' சாதியினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு முதலி சின்னத்தம்பி என்பவர் கொல்லப்பட்டு சாதிப்போராட்டக் கலவரத்தில் முதல் தியாகியானார். இதன் பின்பு மகாதேசாதிபதியின் அனுமதியுடன் மேற்படி சடலம் எரிக்கப்பட்டது.

1931இல் சர்வசன வாக்குரிமை அமுலுக்கு வந்தபோது தமிழ்த் தலைவர்களின் பிரதிநிதியாக விளங்கிய சேர் பொன். இராமநாதன் தலித்துகளுக்கு வாக்குரிமை வழங்கக்கூடாது என டொனமூர் ஆணைக்குழு முன் சாட்சியமளித்தார். 1940ம் ஆண்டுகளில் தலித் மக்களிடையே பெரும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டு யாழ்குடாவில் தமது போராட்டங்களை விரிவுபடுத்தினர். போராட்டங்களை வலுப்படுத்த பேருதவியாக செயல் பட்டது சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கமாகும்.

1942இல் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்தினால் வட இலங்கையில் உள்ள சகல தலித்துகளின் நலனையும், ஐக்கியத்தையும் கட்டிக்காக்க ஒரு பொதுவான அமைப்பை உருவாக்க வேண்டும் எனும் நோக்கில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், 1943இல் மிகப் பெரும் தலித் மாநாடு கூட்டப்பட்டு அம்மாநாட்டில் 'சிறுபான்மைத் தமிழர் மகாசபை' என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டு யோவே போல் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இம் மகாசபையானது கல்வி வாய்ப்பு, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைத் தெரிவு, உத்தியோக வாய்ப்பு, சீவல் தொழிலாளர்களின் மேம்பாடு போன்றவைகளுடன் பொருளாதார முன்னேற்றம் போன்ற அனைத்திலும் தலித் மக்களின் எதிர்கால வளர்ச்சி குறித்துப் போராடி வந்தது. இம்மகாசபையின் இரண்டாவது மாநாட்டில் (1944) தலித்துகளின் இன்னல்களையும் ஒடுக்குமுறைகளையும் தீர்ப்பதற்கு ஏதுவாக தலித்துகளுக்கான தனித்தொகுதியை ஒதுக்கியோ, அன்றி நியமனப் பிரதிநிதித்துவம் மூலமான பதவிகளும், யாழ் மாவட்ட மக்கள் விகிதாசாரத்தின்படி 25 சதவீதமான இடமும், தலித்துகளின் விகிதாசாரத்திற்கேற்ப மக்கள் பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டு அத்தீர்மானம் இலங்கை அரசிற்கும் அனுப்பி வைக்கப்பட்டது. 1945இல் நடைபெற்ற மகாசபை மாநாட்டில் மீண்டும் பரிசீலிக்கப்பட்டு அதற்கான தனி ஆணைக்குழு நியமிக்கக் கோரியும் சகல ஸ்தாபன சபைகளிலும் பிரதிநிதித்துவம் கிடைக்கக் கூடிய வகையில் வட்டாரங்கள் பிரிக்கப்பட வேண்டுமெனவும், கல்விப் பிரச்சனையில் முஸ்லிம் மக்களுக்கு அளித்த விசேட சலுகையை தலித்துகளுக்கும் வழங்க வேண்டுமெனக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

1945இல் இலங்கை அரசியல் சட்டத்தில் திருத்தம்

செய்வதற்காக நியமிக்கப்பட்ட சோல்பரி ஆணைக் குழு இலங்கை வந்தபோது மகாசபை சார்பில் தலித் மக்கள் பிரச்சனை பேசப்பட வேண்டுமென தீர்மானித்து எடுக்கப்பட்ட முயற்சிகள் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தினால் முறியடிக்கப்பட இருந்தது. அக்காலத்தில் கரவெட்டி யிலுள்ள கன்பொல்லைக் கிராமத்தில் நிகழ்ந்த சாதிக் கலவரத்தின் அனர்த்தங்களை சோல்பரி ஆணைக்குழு நேரில் பார்வையிட வைத்தனர். இதைத் தொடர்ந்து ‘உயர்’ சாதி வெறியர்கள் இதற்குக் காரணமாயிருந்த மகாசபை பிரதிநிதிகளான எம். சி. சுப்பிரமணியம் கணப திப்பிள்ளை, டி. ஜேம்ஸ் ஆகியோரைத் தாக்கினர். சோல்பரி ஆணைக் குழுவும் பிற்பாடு ‘உயர்’ சாதி யினரால் உருவாக்கப்பட்ட தேசவழமைச் சட்டத் திற்குள் தலித்துகளைக் கட்டிப்போட்ட நிலை தொட ரக் காரணமாகிப்போனது.

1948இல் சுதந்திரம் என்ற பெயரில் பிரித்தானிய அரசு சிங்கள உயர் வர்க்கத்தினரிடமும், யாழ் மேலா திக்க சாதியினரிடமும் அதிகாரங்களை ஒப்படைத்து விட்டுப்போக, தலித்துகள் தொடர்ந்தும் தங்கள் போராட்டத்தினை இடதுசாரிச் சிந்தனையாளர்களை நம்பி புதிய நோக்கில் தமது போராட்டத்தை முன்னெ டுத்துச் சென்றனர். 1955இல் தலித்துகளுக்கும் குடி யேற்றத் திட்டங்களில் காணிகள் வழங்கப்பட வேண்டு மெனும் கோரிக்கையை மகாசபை முன்வைத்தது. 1956இல் நல்லூர் கந்தசாமி தலித்துகளின் வழிபாட் டிற்கு திறந்து விடப்பட்டது. தொடர்ந்தும் தங்களது தீண்டாமைக் கொடுமைக்கெதிரான போராட்டங்களை முன்னெடுத்து வந்ததை சகிக்க முடியாத தமிழ்க் கட்சிகள் மகாசபையைப் பிரிக்கும் சதி முயற்சியிலும் ஈடுபட்டனர். 1956இல் மகாசபை உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் தமிழரசுக் கட்சியின் சதி வலைக்குள் விழுந்தனர். இருப்பினும் மகாசபையின் நீண்டகாலக் கோரிக்கையான தீண்டாமை ஒழிப்புச் சட்டம் பண்டார நாயக்காவின் ஆட்சிக்காலத்தில் சட்டமாக்கப் பட்டது. மீண்டும் 1971இல் இச்சட்டமானது திருத்தமாக் கப்பட்டு அதற்கான அபராதங்களும், சிறைக் காலங்களும் அதிகரிக்கப்பட்டது.

1956 - 1960 காலப்பகுதியில் சண்டிலிப்பாய், கரவெட்டி, மட்டுவில், கட்டுவன்புலம், புலோலி, மந்துவில் ஆகிய பகுதிகளில் 19 பாடசாலை கள் தலித்துகளுக்கென்றே உருவாக்கப் பட்டன. யாழ் சைவ வேளாள சாதியினரின் ஒடுக்குமுறைகளிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாக, 1967இல் தலித்துகள் பௌத்த மதத் திற்கு மாறுவது என முடிவெடுக்கப்பட்டு பல கிராமங்களில் இருந்து நான் உட்பட, அனைத்து இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவராக இருந்த வைரமுத்து தலைமையில், நூறு தலித் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு தென்னிலங் கைக்கு அனுப்பப்பட்டனர். இதனைத்தொடர்ந்து கன்பொல்லை, கரவெட்டி, புத்தூர், பூநகரி ஆகிய கிராமங்களிலும் பௌத்த பாடசாலைகள் உருவாக்கப் பட்டன.

1965இல் அருந்ததியர் சங்கம், சலவைத் தொழி லாளர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், திருவள் ளுவர் மகாசபை போன்ற பல சங்கங்களினால் சிறு பான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி என்னும் பொது அமைப்பு உருவாக்கப்பட்டு 1966இல் அச்சுவேலியில் ஒரு மாநாட்டையும் நடாத்தியது. அம்மாநாட்டின் இறுதி முடிவாக தலித்மக்கள் யாழ் ‘உயர்’ சாதியினரால் இரண் டாம்தர மக்களாகக் கருதும் நிலைப்பாட்டிற்கு எதிரா கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானத்தின் போது தலித் மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தமக்கு மூன்று மாத கால அவகாசம் தரும்படி தமிழ் காங்கிரஸ் கட்சி, தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டனர். அது அவர்களின் இயல்பான ஏமாற்று நடவடிக்கைதான் என்பதைப் பின்னர் உணர்ந்து கொண்டோம்.

சர்வதேசரீதியில் சீன-ரஷ்ய கம்யூனிஸ்ட் பிளவு நிகழ்ந்த நிலையில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி யிலும் அப்பாதிப்பு நிகழ்ந்தது. அதன் காரணமாய் சீனச் சார்பினர் சிறுபான்மைத் தமிழர் மகாசபையை விட்டு விலகினர். இதில் அங்கம் வகித்தவர்களாலேயே தீண் டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் அமைப்பாளராக கே. டானியல் பணியாற்றினார். இதன் முதலாவது மாநாடு 21.10.1967இல் யாழ்நகர மண்டபத்தில் அமைந்த சின்னர் கார்த்திகேசு (சங்கானை தேநீர்க்கடை பிரவேசத்தின்போது கொல் லப்பட்ட) அரங்கில் நடைபெற்றது.

1967இல் ஆரம்பிக்கப்பட்ட சங்கானைப் போராட்ட மானது வடபகுதி முழுவதும் பரவியது. அதன் விளை வால் நிச்சாமம் எனும் கிராமத்தில் வன்னியன் குமரேசு அவர்கள் சாதி வெறியர்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியானார். அப்போது ஆதரவாக எஸ் டி பண்டார நாயக்கா (கம்பஹா எம். பி.) அவர்கள் இருந்தார். தலித் தமிழர்கள் சம்பந்தமான வழக்குகளில் ஆஜராவதற்கு யாழ்ப்பாண சட்டத்தரணிகள் எவருமே முன்வராத நிலையில் பிரயாணச் செலவை மட்டும் ஏற்று எமது தலித் மக்களுக்காக யாழ்ப்பாணம் வந்து வழக்கு



களை நடத்தியவர்கள் சில சிங்களச் சட்டத் தரணிகளே.

தலித்துகள் தங்களது போராட்டங்களை இடது சாரிக் கொள்கைகளின் வழிகாட்டுதலிலேயே பின்பற்றி வந்தனர். இதனால் தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி என்பனவற்றிற்கு தலித்துகளின் இப்போக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தது. தமிழ்க் கட்சிகளெல்லாம்

இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியாகி, உயர் சைவவேளாளர்களின் அபிலாஷைகளின் ‘தமிழீழம்’ கோசத்தை முன்வைத்து அதை தமது நலன்களைப் பேணும் முயற்சிக்காக மட்டுமே பயன்படுத்த முனைந்தனர்.

1967 -1982 காலப்பகுதி போராட்டத்தில் மட்டும் பதினைந்துக்கும் மேற்பட்ட தலித்துகள் ‘உயர்’ சாதியினரால் கொலை செய்யப்பட்டனர். சின்னர் கார்த்திகேசு (சங்கானை), இரத்தினம் (மந்துவில்), வன்னியர் குமரேசு (சங்கானை), மா. சீவரட்ணம் (கன்பொல்லை), க. செல்வராசா (கன்பொல்லை), மு. கந்தையா (கரவெட்டி), அரியரட்ணம் (அச்சுவேலி), நல்லப்பு (சங்கானை), அண்ணாச்சாமி (புன்னாலைக்கட்டுவன்) ஆகியோரை மேட்டுக்குடி அதிகார வர்க்கத்தினர் பயங்கரவாதிகள் எனப் பழி சுமத்திக் கொன்றனர்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் சார்பில் டானியல் போன்றவர்களால் எழுதப்பெற்ற பிரச்சார நாடகங்கள் மேடையேறியமையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அதனுடன் கே. பசுபதி போன்ற கவிஞர்களின் கவிதைகளும் தாழ்த்தப்பட்ட தமிழ்த் தலித் மக்களுக்கு உணர்ச்சியையும், உத்வேகத்தையும் அளிப்பவையாக விளங்கின. 1980இல் உருவாக்கப்பட்ட ‘கலை இலக்கியப் பெருமன்றம்’ டானியலை அமைப்பாளராகக் கொண்டு இயங்கியது. ‘மக்கள் இலக்கியம்’ என்ற பத்திரிகையும், அதுபோல மலர்விழி, தேன்கூடு, வாகை, தாரகை முதலிய சஞ்சிகைகளும் சிறுபான்மைத் தலித்துகளின் வாழ்வியல் பிரச்சனைகளை முன்வைப்பனவாக வெளிவந்தன. இந்த வகையில் இலங்கையில் இன்றும் தலித்துகளின் மீதான ‘உயர்’சாதி ஒடுக்கு முறை சார்ந்த மனநிலையை தமது இலக்கியப் படைப்பாற்றல் திறனூடாக அம்பலப்படுத்தி வருபவர்களாக தெணியான், டொமினிக் ஜீவா போன்றோர் உள்ளனர்.

தேவதாசன்: 1910ம் ஆண்டில், அதாவது கிட்டத்தட்ட 100 வருடங்களிற்கு முன்னர் தலித்துகள் எவ்வாறு இருந்தார்களோ அந்த நிலைக்குச் சென்றிருக்கிறார்கள். அந்த வீழ்ச்சியைப்பற்றித் தெரிந்தால்தான் நாங்கள் இப்போது ஏன் தலித் மக்கள் எழுச்சிபற்றிப் பேசுகிறோம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

யோகரட்ணம்: தமிழீழக் கோஷம் தொடங்கியது. இதன்மூலம் சில மாற்றங்கள் ஏற்பட்டது. தலித் உரிமைகள் சம்பந்தமான விடயம் மழுங்கடிக்கப்பட்டது. ஏற்கனவே போராட்ட குணாம்சங்களுடன் இருந்தவர்களும் தமிழீழக் கோரிக்கையினால் அள்ளுப்பட்டுப் போனார்கள்.

ராஜலிங்கம் எம்.பி.க்கு நடந்ததையும் 1981களில் புன்னாலைக்கட்டுவன், எழுதுமட்டுவாள் போன்ற இடங்களில் நடந்த கொடுமைகளையும் சுட்டிக் காட்டினார். மாடுகள் குளிக்கக்கூடிய குளத்தில்கூட தலித்துகள் குளிக்க முடியாமல் போனதையும் அதற்காக அவர் துரத்தித் துரத்திக் கொல்லப்பட்டதையும் எடுத்துக் காட்டினார். இந்தக் காலகட்டத்தில் ஆயுதப் போராட்டம் எழுச்சியடைந்திருந்ததையும் தமிழ் மக்களின் ஏகபோகப் பிரதிநிதிகள் என்று தங்களைக் கூறிக் கொள்பவர்களிடமும் இதுபற்றிப் பிரேரிக்கும் போது அவர்களும் மேற்படுத்தப்பட்ட சாதியினரின் நடவடிக்கைகளைக் கண்டுகொள்ளாமல் இருப்பது தான் புத்திசாலித்தனம் என்பதுபோன்ற அறிவுரைகளைக் கூறினார்கள்.

81ம் ஆண்டு யாழ் நூல்நிலையம் எரிக்கப்பட்டதற்கு இன்றும் கதறிக்கொண்டிருக்கிறார்கள். கோடி ரூபாய் செலவழித்து அதை மீண்டும் மக்களின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த யாழ் மேயராக இருந்த செல்லன் கந்தையா அவர்களினால் புனரமைக்கப்பட்டது. 06.02.2003இல் மீண்டும் திறக்கப்பட இருந்த போது அவருடைய பெயர் அங்கு பொறிக்கப்பட்டுவிடும் என்பதற்காகவே அந்நிகழ்ச்சி தடை செய்யப்பட்டது தெரிந்ததே. யாழ் மத்திய கல்லூரி அதிபர் ராஜதுரை அவர்கள் கொல்லப்பட்டமை என்று இப்படியான நிகழ்வுகள் தலித்தாக இருந்ததால் மட்டுமே நடந்துள்ள கொடுமைகளை வரிசையாக அடுக்கிக் கொண்டே போகலாம்.

யோகரட்ணம் அவர்களின் பேச்சினைத் தொடர்ந்த சபையோர் குறிப்புகள்:

தேவதாசன்: தலித்துகளும் ஒடுக்கப்பட்டிருக்கும் சமூகமும் தமிழ்த் தலைமைகளை எப்போதும் சந்தேகத்துடன் பார்க்கவேண்டும் என்பதுதான் என் நிலைப்பாடாக இருக்கின்றது.

பரராஜசிங்கம்: ‘சங்கம்’ என்ற இணையத்தளமொன்றில் தமிழர்களின் முக்கிய நாட்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கும் பகுதியில் ஆறுமுகநாவலர் ஒரு தாழ்த்தப்பட்ட மாணவனைச் சேர்த்ததால் யாழ் மத்திய கல்லூரியில் இருந்து வெளியேறினார் என்று. மற்றது யாழ் நூலகம் எரிக்கப்பட்ட அதேநாள் எழுதுமட்டுவாளில் பாடசாலைக்குச் சென்ற ‘தாழ்த்தப்பட்ட’ சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படுபவர்களின் புத்தகங்கள் வீதியில் வைத்துக் கொழுத்தப்பட்டன. இதுபற்றிய பதிவுகள் எதுவும் இல்லை.

யோகரட்ணம்: இதை டானியல் ஒரு இடத்தில் இப்படிப் பதிவு செய்கிறார். யாழ் நூலகம் எரிக்கப்பட்டது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று அவரிடம் கேட்டதற்கு அவர், எழுதுமட்டுவாளில் பாடசாலை மாணவர்களின் புத்தகங்கள் கொழுத்தப்பட்டதுபற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று அவர்களையே திருப்பிக் கேட்டார். இது சரி என்றால் அதுவும் சரி. இது பிழை என்றால் அதுவும் பிழை.

ஸ்ராலின்: நீண்ட ஆண்டுகளுக்கு முன்பிருந்தே போராட்ட உணர்வு இயல்பாகவே தலித்துகளிடம் இருந்திருக்கின்றது. 40களில் கம்யூனிஸ்ட் கட்சி அதற்கொரு தலைமையைக் கொடுத்திருக்கின்றது. 62க்குப் பின்னான கம்யூனிஸ்ட் கட்சிப் பிளவுகளில் தமிழ்க் காங்கிரசுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட போட்டி பிளவுகளில் தலித்துகளும் பிளவுபட்டுப் போனார்கள்.

தேவதாசன்: ஒரு காலத்தில் இடத்தில் இடதுசாரிகள் ஆட்சியைப் பிடிக்கக்கூடும் என்றொரு சாத்தியம் இருந்தது. இன்றைய காலகட்டத்தில் அப்படி ஏதாவது இருக்கின்றதென்று நாங்கள் நம்பினால் அது

சுத்தப் பம்மாத்து. குறிப்பாக ஜேவிபியை இனவாதக் கட்சியாகத்தான் நாங்கள் பார்க்கிறோம். இந்தக் கால கட்டத்தில் ஒரு தீர்வுத்திட்டம் வருவதென்றால் இந்த மக்களிற்கு இழைக்கப்பட்ட கொடுமைகளிற்கு யார் நஷ்ட ஈடு வழங்குவதென்பதுதான் இப்போதைய கேள்வி. இவர்களுக்கு கட்டாயம் நஷ்ட ஈடு வழங்கியே யாக வேண்டும். அதற்கான தீர்வுத் திட்டமொன்றை நாங்கள் சமர்ப்பித்திருக்கிறோம். எனவே வரப்போகும் தீர்வுத் திட்டங்கள் இவைகளையும் உள்ளடக்கி அடுத்த கட்டச் செயற்பாட்டுக்கு நகரவேண்டும்.

யோகரட்ணம்: இதை இன்னொரு விதத்தில் பார்த்தால் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்டது கொடுமை என்று எவ்வளவு தூரம் ஆதங்கப்படுகிறோம். அல்லது கிழக்குப் பிரச்சினை, மலையக மக்கள் பிரச் சினை என்பவற்றைத் தனித்தனியே பார்க்க வேண்டும் என்று விளங்கிக் கொள்கிறோம். அதுபோல் தலித்து கள் பற்றிய விடயங்களும் பிரச்சினைகளும் ஒரு தனிப் பிரிவாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

தனபால்: எழுத்துக்களில் 'தாழ்த்தப்பட்ட மக்கள்' என்று சொல்வதைவிட்டு 'தாழ்த்தப்பட்ட மக்கள் என்று சொல்லப்பட்ட மக்கள்' என்று பாவிக்கப்பட வேண்டும்.

ராகவன்: அம்பேத்கர் பேசிய தீண்டாமை, அகமண முறை, மேல்-கீழ் என்ற படிமுறை பற்றிய விமர்சனங்கள் மிக முக்கியமானவை.

சுசீந்திரன்: ஆகமக் கோயில்களுக்கு முன்பு சிறு தெய்வ வழிபாடுகள் இருந்தன. மலையக மக்கள் 1824இல் வரத் தொடங்கும்போது இது இங்கு வந்தது. சாதிப்பிரச்சினை என்பது மிகவும் கோரமான வடிவில் இன்றும் பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி போன்ற சிறு கிராமங் களிலும் தொடர்ந்து கொண்டிருப்பதைக் காணலாம். பொருளாதார மேம்பாட்டினால் ஏற்கனவே உயர்த்தப் பட்ட சமூகத்தினரால் கீழானவர்கள் என்று கருதப்பட் டவர்கள் அடிமட்ட மக்களை அடக்கி ஒடுக்கு கிறார்கள்.

## 10.06.2007
## ஞாயிற்றுக்கிழமை

முதலாவது நிகழ்வாக, பிரதீபனின் புகைப்படக் கண்காட்சி தொடர்பான விமர்சனக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பரராஜசிங்கம் அவர்கள் தலைமை வகித்தார்.

றவூப்: இதில் ஒரு படத்தில் இருட்டும் அதற்குப் பின்னால் ஒரு வெளிச்சமும் தெரிகின்றது. இலங்கை யில் உள்ள சகல மக்களும் இப்போது ஒரு இருண்ட சூழலில் இருக்கின்றார்கள். இவர்கள் ஒரு வெளிச் சத்தை காண்பார்கள் என்ற குறியீடாக எனக்குத் தோன்றுகிறது.

கிருஷ்ணா: புகைப்படம் என்பது ஒரு சித்திரம் போன்றது. ஈபிள் கோபுரத்திற்கு முன்னால் எடுத்த படத்தைக் கவனித்தால், குறிப்பாக இதை எடுப்பது மிகவும் கடினமானது என்பதை ஒரு புகைப்படக் கலைஞனாக என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது. அது ஒரு விஷயத்தை மட்டும் சொல்வதுடன் நிற்காமல் ஒரு சித்திரமாயும் மிளிர்கின்றது என்று சொல்லலாம். மற்றது ஒரு ஓடைக்குள் எடுத்த படம். அடுத்து மெத்ரோ ஸ்ரேசனுக்குள் எடுத்த படத்தில் ஒரு வேகத்தைக் காட்டி இருக்கிறார். ஒவ்வொரு படங்களையும் பற்றி நிறையச் சொல்ல முடியும். மொத்தத்தில் உங்களிற்கு ஒரு பிரத்தியேகத் திறமை இருப்பதைத் தெளிவாகக் காட்டியிருக்கிறீர்கள்.

தேவதாசன்: எனக்கு இதன் நுணுக்கங்கள் எதுவும் தெரியாது. அன்றாடம் பிழைப்புத் தேடி அலையும் மனிதர்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக நான் நினைக்கிறேன். நீங்கள் இயற்கையாகத்தான் எல்லா வற்றையும் எடுத்திருக்கிறீர்கள். எதிலும் செயற்கை இல்லை. அப்படி இருக்க நீங்கள் ஏன் இவற்றை இயற் கையாக இருக்கும் வண்ணங்களுடன் எடுக்காமல் வெறும் கறுப்பு-வெள்ளையில் எடுத்திருக்கிறீர்கள். அதன் நோக்கம் என்ன?

பிரதீபன்: பல காரணங்கள் உண்டு. 1. கறுப்பு-வெள்ளை எனக்குப் பிடித்திருக்கின்றது. 2. இந்தப் படங்கள் ஒரு சந்தோஷமான விஷயத்தைச் சொல் வதல்ல. வலியையும் வேதனையையும் சொல்கின்றன. அதைச் சொல்வதற்கு எனக்கு நிறங்கள் தேவை யில்லை என்று நான் நினைக்கிறேன்.

இவற்றை நிறங்களுடன் சொல்வதில் நிறையச் சிக்கல் வரும். நிறங்கள் இருக்கும்போது புகைப்படங் களின் அரசியலுக்குள் செல்ல முடியாது. உதாரணத் திற்கு, ஆரம்பத்தில் சில போட்டோக்கள் செய்திருக் கிறேன். அப்போது நான் எடுத்த போட்டோக்களை எனக்குத் தெரிந்த ஒரு அனுபவமான போட்டோ கிராபரிடம் கொண்டு சென்று காட்டினேன். அந்தப் படத்தில் பூனை ஒன்று பால் குடித்துக் கொண்டி ருக்கிறது. பின்னால் நிறையப் பச்சை இலைகள். பூனை focusஇல். இலைகள் out of focusஇல். அதைப் பார்த்து அவர் சொன்னார் போட்டோ நன்றாக இருக்கிறது. ஆனால் பின்னுக்கு out of focusஇல் இருக்கும் மிகச் சிறிய ஒரு சிவப்புப் பூ, தன்னை அந்தப் படத்துக்குள் நுழைவதைத் தடுக்கின்றதென்று. மற்றது போட்டோக் களைப் பார்க்கும்போது அதைக் கிட்டத்தட்ட 20 பெட்டிகளாகப் பிரித்து அவை ஒவ்வொன்றுக்குள்ளும் அதன் அரசியலைத் தேடவேண்டும் என்று சொல்லப் படுகிறது. அதனால் ஒரு சிறுபுள்ளிகூட அந்தப் புகைப் படங்களின் அரசியலுக்குள் செல்வதற்குத் தடையாக இருக்கக்கூடாது என்பதில் நான் கவனமாக இருக் கின்றேன் என்று நினைக்கின்றேன். இந்தப் புகைப் படங்களுக்கூடாக உங்களோடு நிறைய விடயங் களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று விரும்பு கிறேன்.

பரா: பிரதீபன் கறுப்பு-வெள்ளை பற்றிய நல்லதொரு விளக்கத்தைக் கொடுத்திருந்தார். உதாரணத்திற்கு ஒருவரை எவ்வளவு கலர்ப்படம் எடுத்தாலும் கறுப்பு-வெள்ளைப் புகைப்படம்தான் ஒருவருடைய கரெக்டரை வெளியில் கொண்டு வரும்.

சுசீந்திரன்: குறிப்பாக 7வது படம். அந்தக் காலத்தில் 4ம் குறுக்குத் தெருவில் எப்போது லொறி வரும் என்று காத்துக் கொண்டிருப்பவர்களைப் பார்த்திருப்பீர்கள். அதேமாதிரி இங்கும் அன்றாடம் வேலைக்காகக் காத்திருப்பவர்கள், வெளிநாட்டவர்கள், எந்தவிதமான அடையாளப் பத்திரங்களும் இல்லாதவர்கள், எந்த நேரத்திலும் நாடு கடத்தப்படலாம் என்னும் ஆபத்தை எதிர்நோக்கி இருப்பவர்கள், நிரந்தர வதிவிடம் இல்லாத நபர்கள், பொலிசைக் கண்டதும் ஓடி ஒளிப்பதற்குத் தயாரான நிலையில் இவர்கள் எப்போதும் இருக்க வேண்டும். இப்படிப் பல்வேறு விடயங்கள் அந்த ஒளிக்குப் பின்னால் இருக்கின்றது. ஆனால் அவ்வளவு செய்திகளையும் இந்தப் படம் தரவில்லை என்று நான் நம்புகிறேன்.

பிரதீபன்: எல்லாப் படங்களும் ஒரு வகைக்குள்தான் அடங்கும். அதனால் தொடர்ச்சியாக, இத்தொடரைப் பார்க்கும்போது உங்களுக்கு அத்தகவல்கள் கிடைக்கும் என்று நான் நினைக்கிறேன். பார்வையாளர்களுடன் உரையாடுவதற்கு, போட்டோகிராபியின் இத்தனை கால வரலாற்றில் போட்டோகிராபி ரெக்னிக்ஸை வைத்து சில சொற்பதங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அந்த மொழியைப் பாவித்துத்தான் நானும் பேச முனைந்திருக்கிறேன். சரியான ஒரு சட்டகத்துக்குள் மையப்படுத்தி கமராவை focus பண்ணாதிருத்தல் என்பதும் அவற்றில் ஒன்று.

மீரா: மூன்றாவது படத்தை எடுத்தால், ஸ்ரேசனில் சாமான் விற்கின்ற ஒரு ஆள். காலில் கயிறு கட்டியது போல் அந்த இடத்திலேயே நிற்க வேணும். மற்றவர்கள் அதை வேகமாகக் கடந்து செல்கிறார்கள். இது புரிகிறது. ஆனால் மீதி எல்லாப் படங்களிலும் ஏன் என்ன சந்தர்ப்பங்களில் அவற்றை எடுத்தீர்கள் என்பதை விளங்கப்படுத்த முடியுமா?

பிரதீபன்: இதில் இருக்கும் ஒவ்வொரு படத்தையும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரிப் பார்க்கக்கூடும். ஒவ்வொன்றுக்கும் நான் விளக்கம் கொடுத்தால் அதற்கான purpose இல்லாமல் போய்விடும்.

மீரா: அதை விளங்கிக்கொள்ள முடிகிறது. ஆனால் ஒவ்வொரு போட்டோவையும் எடுக்கும்போது நீங்கள் என்ன மனநிலையில் இருந்தீர்கள்? அல்லது அவை ஒவ்வொன்றையும் எடுக்கும்போது என்ன நினைத்தீர்கள்?

பிரதீபன்: இதற்குப் பதில் சொல்லாமல் தவிர்ப்பது நல்லது.

சிவலிங்கம்: என்னிடம் கமராவைத் தந்தால் நான் கடற்கரைக்குப் போவேன் அல்லது பார்க்கிற்குப் போவேன். ஒரு திறந்தவெளியில் எல்லாமே திறந்ததாகவும் இயற்கையாகவும் இருக்கிறது என்று அவற்றைப் படம்பிடிக்க நினைப்பேன். ஆனால் எனக்கு இந்தப் படங்களைப் பார்க்கும்போது ஏதோ ஒரு ஒடுக்கத்திற்குள்தான் எல்லாவற்றையும் பார்ப்பதுபோல் இருக்கின்றது. நாங்கள் பார்ப்பது வேறு. ஒரு கலைஞன் பார்ப்பது வேறு. நெருக்கடிகளைக் காட்டவேண்டும் என்ற உங்களுடைய சிந்தனைதான் இப்படியான ஒடுக்கங்கள், மூடிய இடங்கள் என்று உங்களுடைய கமராவைத் திருப்பி இருக்கின்றதென்று நான் நினைக்கிறேன்.

பிரதீபன்: இது ஒரு ஆறேழு மாத கால இடைவெளியில் எடுக்கப்பட்ட படங்கள். இந்தப் படங்கள் எடுக்கும்போது என்னுடைய situationஉம் அப்படித்தான் இருந்தது.

பரா: சிவலிங்கம் கேட்டது நல்லதொரு கேள்வி. வழக்கமாகப் புகைப்படக் கலைஞனிடம் நீங்கள் என்ன கமரா பாவிக்கிறீர்கள் என்று கேட்டால், manual என்றுதான் சொல்வார்கள். ஏனென்றால் settings எல்லாவற்றையும் கலைஞனே தீர்மானிக்கிறான். சாதாரணமானவர்களுக்கும் புகைப்படக் கலைஞனுக்கும் என்ன வித்தியாசம் என்றால், சாதாரணமானவர்களின் கமரா படம் எடுக்கும். கலைஞன் அவன்தான் படம் எடுப்பான், கமரா அல்ல. இது வெறும் படங்கள் அல்ல. பிரதீபன் உங்களோடு பேசுகிறார். இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது ஹங்கேரியில் ஒளிந்து வாழ்ந்த ஒரு புகைப்படக் கலைஞனுக்கு அப்போது கேட்கக்கூடியதாக இருந்தது பிபிசி செய்திகள் மட்டும்தான். அவருடைய அல்பத்தைப் பார்த்தால் அவர் எடுத்த படங்களில் எல்லாமே பிபிசி செய்திக்குப் பின்னான இசையின் ரிதத்தைத்தான் பார்க்கக்கூடியதாக உள்ளது.

சௌந்தரராஜன்: படங்கள் எல்லாம் பொதுவாக அவலத்தைச் சொல்வதாகத்தான் இருக்கின்றது. உண்மையில் நாங்கள் அவலத்துக்கு அப்பால் சந்தோஷமாக இருக்கின்றோம். சந்தோஷத்தை வெளிப்படுத்துகிற மாதிரி, ஒரு படத்தையும் இதில் காணவில்லை. ஏன் சந்தோஷத்தைத் தவிர்த்திருக்கின்றோம்? சந்தோஷத்தையும் அவலத்தையும் எடுத்தால் சந்தோஷம்தான் மனதில் படியும். அவலம் அந்த நேரம் வந்திட்டுப் போகும். சந்தோஷத்தைக் காணத்தான் எல்லோரும் தேடி ஓடுகினம். எங்கள் எல்லாரிலையும் ஒரு குணம் இருக்கு, அவலத்தைச் சொன்னாத்தான் மனிசர் எண்டு.

பிரதீபன்: இதில் இந்தப் படங்களைப் பார்த்துச் சந்தோஷப்பட என்ன இருக்கின்றது? அது எந்த விடயங்களைப்பற்றிப் பேசுகிறது என்பதையும் அறிமுகத்தில் சொல்லி இருக்கிறேன். நான் இதிலை எதையும் create பண்ணேல்லை. அவலத்தை வெளியே கொண்டு வரவேணும் என்று முயற்சித்து அதைக் கொண்டு வரவில்லை. நான் போகும்போது என்னுடைய உணர்வுகள் இவற்றைப் படம் பிடிக்கத் தூண்டின. அவ்வளவுதான்.

கிருஷ்ணா: நாங்கள் வீட்டிலை எங்கடை அல்பங்களை எடுத்துப் பார்த்தால் எல்லாம் சந்தோஷமான நிகழ்வுகள்தான். கலியாணவீடு, அந்த வீடு, இந்த வீடென்று. அதைப் பார்த்துப் பார்த்து எனக்கு அலுத்துப் போச்சு. எனக்கு யதார்த்தம் தேவை. ஒவ்வொரு நாளும் பாரிஸ் நகரத்தின் ஒரு மாலைப்பொழுதில் என்னென்ன நடக்கும் என்பதை இப்படங்கள் எனக்கு ஒரு கதை போல் சொல்வதாகத்தான் நான் உணருகின்றேன். அடிப்படை வண்ணங்கள் 4 இருக்குது. ஆனால் கறுப்பு வெள்ளை என்று எடுத்தால் அதற்குள் இலட்சம் possi

-bilities இருக்குது.

சந்துாஸ்: சில மனோதத்துவ நிபுணர்கள் சொல்கிறார்கள், மன அழுத்தம் கூடிய நேரங்களில் அதிகமாகச் சாப்பிடுவார்களென்று. வெளியில் அளவிற்கு அதிகமான சந்தோஷமாக இருப்பார்கள். ஆனால் உண்மையிலேயே அவர்களுடைய மனது சந்தோஷமாக இருக்கின்றதா என்றால் இல்லை. உதாரணத்துக்கு, வான்கோவை எடுத்தால் அவர் விரக்தியான மனநிலையில் இருந்த காலங்களில் பூக்களாகவே மட்டும் கீறித் தள்ளினார். எனவே படைப்புகளை மட்டும் வைத்து சந்தோஷம் - துக்கம் பற்றிப் பேசுவது அர்த்தமில்லாதது என்று நினைக்கிறேன்.

பரா: நாங்கள் எங்களைச் சந்தோசமாகக் காட்ட முயற்சித்துக்கொண்டிருக்கிறோம் என்பது எல்லாருக்கும் தெரியும். எனவே மீண்டும் ஏன் ஒரு escapismக்குப் போகவேணும். மற்றது எல்லாப் படங்களிலும் ஏதோ ஒரு இடத்தில் ஒளி தெரிகின்றது. ஒரு கலைஞனுக்கே உரித்தான திறமையுடன் சட்டகங்களைப் பதிவு செய்திருக்கிறார் பிரதீபன்.

மீரா: கிருஷ்ணா சொன்னார், ஒரு கலைஞன் தன்னுடைய சூழ்நிலையைக் கலைப் படைப்பாகக் காட்டி இருக்கின்றார் என்று. அது ஓகே. ஆனால். கலைஞனுக்கு ஒரு பொறுப்பு இருக்கிறது. சொல்ல வருகிற விடயத்தை முழுமையாகச் சொல்லவேண்டும் என்று. நீங்கள் ஒரு விஷயத்தைத் தொட்டிருக்கிறீர்கள் அதை முழுமையாகச் சொல்லவில்லை என்றுதான் படுகிறது. இதைச் சொல்வது சுலபம்.

பிரதீபன்: இதை வந்து விசா இல்லாத ஒருவரின் பிரச்சினை என்று பார்க்க ஏலாது. அது பெரிய விஷயம். அனுபவமாக விரிந்து கொண்டு போகும். பங்களா தேஷில் இருந்து வந்த ஒரு ஆளுக்கும் யாழ்ப்பாணத்தில் இருந்த வந்த ஒரு ஆளுக்கும் இருக்கிற விசாப் பிரச்சினை வேறுவேறு. யாழ்ப்பாணத்திலை இருந்து வாற ஓராளுக்கு வந்து ஒரு கிழமையில் இருக்க இடம், ரெஸ்ரோறன்ரில் வேலை, 1500யூரோ சம்பளம். கஷ்டங்கள் இருக்கும்தான். ஆனால் அது வேறு மாதிரி. இங்கு நான் சொல்ல வருவது ஒரு சின்ன விஷயம்தான். பெரிய வட்டத்துக்குள் ஒரு சின்ன வட்டம். நான் பெரிய வட்டத்துக்குள் போகவில்லை. ஏனென்றால் இந்தச் சின்ன வட்டத்துக்குள்ளேயே எனக்குச் சொல்வதற்கு நிறைய விடயங்கள் இருக்கு. பரந்த தளத்தில் பேசுவதென்பது அது இன்னுமொரு விடயம்.



ராகவன்: ஒரு மனிதர் இயல்பாக இருப்பதற்கு இந்த நாடுகளில் விசா மிகவும் முக்கியம். அது இல்லாத போதான சூழ்நிலையை நீங்கள் ஓரளவு பதிய முயற்சித்திருக்கிறீர்கள். இந்த ஈபிள் கோபுரத்தை எடுத்தால் அது பாரிஸின் பிரமாண்டத்தையும் ஒரு symbolஆகவும் காட்டுவது. ஆனால் இங்கு அதே ஈபிள் கோபுரம் negativeஆகத்தான் காட்டப்படுகிறது. பிரம்மாண்டங்களுக்குள் நசுங்குண்டு போகும் மனித அவலங்களைக் காட்ட முனைகிறீர்கள். ஆனால் நீங்கள் இன்னும் ஆழமாக இதற்குள் போகவேண்டும் என்றுதான் நான் பார்க்கிறேன்.

அசோக்: புகைப்படங்கள் என்று பார்த்தால் அது மொழியற்ற ஒரு மொழி ஊடகம்தான். ஆனால் இந்தக் கலந்துரையாடல் எப்படிப் போகின்றதென்றால் புகைப் படக்கலைக்கு கறுப்பு-வெள்ளைதான் ஒரேயொரு தீர்வு என்பது போல். நான் என்ன நினைக்கின்றேன் என்றால் வர்ணங்களின் தேர்வு அழகியல் சார்ந்தது. ஒரு புகைப் படக் கலைஞனோ அல்லது ஓவியனோ தன்னுடைய கருத்தைத் தெரிவிப்பதற்கு இந்த ஊடகத்தைத் தெரிவு செய்கிறான். வர்ணங்கள் ஒவ்வொன்றுக்கும் அர்த்தங்கள் இருக்கின்றது. வர்ணங்களைத் தேடுகின்ற நபருக்கு இருக்கின்ற கோட்பாட்டுச் சிந்தனையின் அடிப்படையில்தான் இது நிகழ்கின்றது. கறுப்பு என்பது நாங்கள் நினைக்கின்ற விஷயங்களை வெகு சுலபமாகச் சொல்வதற்குக் காரணமாக அமையலாம். ஆனால் உண்மையிலேயே ஒரு தேர்ச்சி பெற்ற கலைஞன் என்றால் வர்ணங்களுக்கூடாகத் தன்னுடைய கோட்பாட்டை வெளிப்படுத்துவதுதான் சவால் நிறைந்தது. எப்போதுமே கலைஞனுக்கு சவால்கள் மிக முக்கியமானது. கறுப்புக்கூடாக நாங்கள் துயரங்களை அல்லது நாங்கள் நினைக்கிற மன அழுத்தங்களைக் கொண்டுவரமுடியும். அதற்கு அப்பால் வர்ணங்களுக்கான அடிப்படைக் கோட்பாடுகள் இருக்கின்றன. அவற்றிலும் நாங்கள் கவனம் கொள்ளவேண்டும். வர்ணங்களிற்கூடாக ஒரு துயரத்தைக் கொண்டு வருவதற்கும் கறுப்பு வெள்ளைக்கூடாக ஒரு துயரத்தைக் கொண்டு வருவதற்கும் வித்தியாசங்கள் இருக்கின்றன. அதற்காக என்னிடம் கமரா இருந்தால் நான் கறுப்பு வெள்ளையில் நல்ல படங்கள் எடுப்பேன் என்பது அர்த்தமில்லை. அதற்கும் ஒரு திறமை வேண்டும். அந்தவகையில் பிரதீபனுடைய இந்தப் புகைப்படங்கள் பல்வேறு விஷயங்களையும் அர்த்தங்களையும் எங்களுக்குக் காட்டுகின்றது. இந்தப் புகைப்படங்களை ஒரு வகையில் பார்த்தால் சர்ரியலிசக் கவிதைதான். கலைஞன் ஒரு அர்த்தத்துடன் எடுத்திருப்பான். நான் ஒரு அர்த்தத்துடன் பார்ப்பேன்.

பிரதீபன்: நீங்கள் இதைக் குறிப்பிடும்போது எனக்

கொரு விடயம் ஞாபகத்திற்கு வருகின்றது. இந்த நிறம் பற்றிய கோட்பாடுகள் எல்லாம் வந்த பிறகுதான் இப்பொழுது அண்மையில் சினிமா ஒன்று எடுப்பது பற்றிய விபரம் ஒன்றைப் படித்தேன். பெயர் ஞாபகமில்லை. படம் நகரப் போவது கறுப்பு-வெள்ளையில். இப்படி அந்தத் திரைப் படக் குழு முடிவு செய்தபோது அதன் ஆர்ட் டைரக்டர் சொல்கிறார் இதுதான் எங்களுடைய முடிவென்றால் backgroundஇல் இருக்கப் போகும் ஒவ்வொரு பொருளும் என்ன நிறத்தில் இருக்க வேண்டும் என்பதை இப்போதே முடிவு செய்ய வேண்டும் என்று. ஏனென்றால் கறுப்பு-வெள்ளைக்குப் பின்னால் இருக்கும் ஒவ்வொரு நிறமும் நிறைய disturb பண்ணும் என்று. சாதாரணமாக நிறப்படம் செய்வதை விட இது மிகவும் கடினமானது என்பதால்தான்.

அசோக்: இது ஒரு படைப்புக்கும் படைப்பாளிக்கும் இடையில் உள்ள பிரச்சினை. ஒரு புகைப்படத்தைப் பார்ப்பதற்கு அதுபற்றிய அறிவு தேவை என்பதை இந்த விவாதங்களிற்குப் பின் உணருகிறேன். உங்களுடைய விளக்கங்களில் இருந்து அவற்றைப் பார்க்கும்போது இப்போது அது புரிகிறது.

சிவராஜன்: நாங்கள் படம் எடுக்கிறதென்றால் அதில் உள்ள மனிதர்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்போம். ஆனால் உங்களுடைய இந்தப் படங்களைப் பார்க்கும்போது, மேலதிக வெளிச்சம் இல்லாமல் இயல்பான ஒளியிலேயே விஷயங்களை வெளியில் கொண்டு வரப் பார்க்கிறீர்கள். இப்படித்தான் 5 வருடங்களிற்கு முன்பு ஒரு நண்பனுடன் அவர் புகைப்படம் எடுக்குமிடத்துக்குச் சென்றேன். அது ஒரு ட்ரெயின், ஒரு பூனைக்குட்டி, ஒரு றோஸ் கலர் கதிரை. இந்த மூன்றும் ஒரே சமயத்தில் அகப்படவேண்டும். இதற்காக எத்தனையோ தடவைகள் அவருடன் சென்று நான் பொறுமை இழந்து இனிமேல் அந்தப் படத்தை எடுப்பதற்கு அவர் செல்லும்போது வரமாட்டேன் என்று கூறிவிட்டேன். அதற்கு ஒரு பயங்கரமான பொறுமை வேண்டும். லைட்டிங் என்பது மிகக் கஷ்டமான விடயம். நீங்கள் எவ்வளவுதூரம் ஒவ்வொரு ஷொட்டிற்கும் உழைத்திருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

ராமராஜ்: பிரதீபனின் இந்த முயற்சிக்கு நாங்கள் நன்றி சொல்ல வேணும். நீங்கள் சமூகத்துடன் சேர்ந்திருக்கிற விஷயங்களுடன் தொடர்புபடுத்தி இந்தக் கலையைச் செய்கிறீர்கள். ஈபிள் ரவரின் கீழ் நிற்கும்போதுகூட அவலங்களை எண்ணும் உங்களுடைய இந்த உணர்வு, நாங்கள் ஒவ்வொருவரும் இங்கு எவ்வளவு வசதியாகவும் சந்தோஷமாகவும் இருந்தாலும் ஒவ்வொரு நிமிடமும் அங்கிருந்தொரு துக்ககரமான செய்தி வந்துகொண்டிருக்கும் ஒரு அவல வாழ்க்கைக்குள்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நீங்கள் இப்படிப் பல பரிமாணங்களில் இன்னும் விஷயங்களைக் கொண்டுவரவேண்டும்.

பகவத்சிங்: இங்கு வந்திருக்கும் ஒரு இளைஞனின் வாழ்வின் தொடக்கமும் அவன் எப்படியான ஒரு வாழ்வைத் தேட முயற்சிக்கின்றான் என்பதும் கடைசியில் எப்படி வாழமுடிகிறது என்பதனதும் தொடரைத்தான் இப்படங்கள் சித்தரிக்கின்றன எனத் தோன்றுகிறது.

தேவதாசன்: அசோக் சொன்ன குறிப்பைத்தான் நான் திரும்பவும் சொல்ல வருகிறேன். அதாவது கறுப்பு வெள்ளைப் படங்களுக்குள் நிறைய விஷயங்களை நாங்கள் ஒளித்துவிடலாம். இதை நீங்கள் கவனத்தில் எடுக்கவேணும். ஏனென்றால் உலகம் நிறங்களால் ஆனது. அதைக் கறுப்பு-வெள்ளைக்குள் சுருக்குவதென்பது நாங்கள் சொல்ல விரும்புகின்ற விஷயத்தை இலகுவாகச் சொல்ல முயற்சிப்பதுதான். இதை ஒரு குறைபாடுள்ள விடயமாகத்தான் பார்க்கிறேனேயன்றி ஒரு கெட்டித்தனமான விடயமாக என்னால் பார்க்க முடியாது. அவலங்களும் கலரிலைதான் இருக்கு. அதை நீங்கள் சரியாக வெளிக்கொணருவதுதான் கலை. கறுப்பு-வெள்ளை என்றொரு காலம் இருந்ததுதான். ஆனால் கலரில் எல்லாவற்றையும் வெளிக்கொணருவதற்கான தொழில்நுட்பங்கள் எல்லாம் வந்துவிட்டன. எனவே நாங்கள் அந்தக் கறுப்பு-வெள்ளைக் காலத்தை முடித்துவிடுவோம். உங்களுடைய இந்தக் கறுப்பு-வெள்ளை விளையாட்டு ஒளிப்பு-மறைப்பு விஷயமாகத்தான் எனக்குத் தெரிகிறது. அதனால் நீங்கள் உங்களுடைய அடுத்த பயணத்தை கலரில் தொடரவேணும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜெகா: இவர் போட்டோகிராபியில் காட்டி இருக்கிற கெட்டித்தனத்தை printingஇல் காட்டவில்லை என்றுதான் தெரிகின்றது. இதை இவர் manuel printingஇல் செய்யவில்லை. செய்திருந்தால் இந்த போட்டோக்களின் details வேறுமாதிரி இருந்திருக்கும். கறுப்பு-வெள்ளைப் படத்தில் இருக்கும் உயிர்ப்பு கலர்ப்படத்தில் இருப்பதில்லை. printingஇல் கவனம் செலுத்தினால் இவருடைய அடுத்தடுத்த கண்காட்சிகள் நிச்சயம் மேலானதாக இருக்கும்.

அடுத்ததாக, இலங்கை இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றிய கலந்துரையாடல் நிகழ்வில் முதலாவதாக சுசீந்திரன் இதுவரை இலங்கையில் இருந்த யாப்புக்களும் அதன்மீதான விமர்சனங்களும் என்ற தலைப்பில் பேசினார். இந்நிகழ்வுக்கும் பரராஜசிங்கம் தலைமை வகித்தார்.

சுசீந்திரன்: இலங்கையில் இன்று மீட்சி ஒன்றினைப் பெற முடியாது, மிகமோசமடைந்து கொண்டிருக்கும் பிரச்சினையான இனமுரண்பாட்டுக்கு நிரந்தரத் தீர்வொன்றை உத்தேசமாகவேனும் வரைவு செய்வதில் இருந்து வருகின்ற இழுபறிகள் தொடர்ந்தபடியே இருக்கின்றன. தெளிவான முடிவொன்றுக்கு பிரதிநிதித்துவ அரசியலாளர்களால் வரமுடியவில்லை. இலங்கை ஒரு பௌத்த, சிங்கள ஒற்றையாட்சிக் குடியரசு நாடென்பதில் இருந்து இம்மியளவேனும் பன்மைத்துவ அரசியலை நோக்கி நகர்வதில் பெரும்பான்மை இனக்கட்சிகள் தோற்றுப் போகின்றன. இதனால் இலங்கையின் பெரும்பான்மைத் தென்பகுதி மக்கள் முன்னால் இவர்கள் எந்தத் தீர்வுத் திட்டத்தினையும் துணிச்சலுடனோ இதய சுத்தியுடனோ முன்வைக்காமையினால், மலினமான முறையில் பரப்புரை செய்யப்படும் இனவாத அரசியலுக்குள் மக்கள்

தொடர்ந்தும் இழுத்துச் செல்லப்படுகின்றனர். தற்காலி கமான இராணுவ வெற்றி தோல்விகளை முன்னிறுத்து வதன் மூலம், அடிப்படையான சிக்கல்கள் ஆரவாரங் களுக்குள் மறைக்கப்படுகின்றன. சுதந்திர இலங்கை யின் அரசியல் வரலாற்றினைக் காய்தல் உவத்தலின்றி அணுகும்போது இலங்கையில் நிலவுகின்ற பன்மைத் துவ மறுப்புக் குணாம்சத்தின் அடிப்படைகள் தெளிவாகின்றன.

ஒரு அரசியல் அமைப்பை நிர்ணயம் செய்கின்ற அரசியல் யாப்புக்களின் வரலாற்றிலும் மற்றும் காலத் திற்குக் காலம் யாப்பில் ஏற்படுத்தப்பட்ட திருத்தச் சட்டங்கள் மற்றும் அவற்றுக்கு அமைவாகச் செய்யப் பட்ட ஒப்பந்தங்கள் போன்றவையும் அதன் அடிப்படை வளர்ச்சியான 'நாம் ஒரு தேசத்தின் மக்கள்' என்ற உணர்வினை வளர்த்தெடுப்பதற்கு மாறாக அதனைச் சீரழித்த போக்கே இலங்கையின் அரசியல் வரலாற் றின் பரிணாமப் போக்கில் எஞ்சி நிற்கின்றது.

பதவிகளைக் கொண்டிருப்பவர்
(நிதி ஒதுக்கீடு மேற்படி அமைச்சுக்களுக்கு 60% , ஏனைய 106 அமைச்சுகளுக்கு மிகுதி 40% )

அமைச்சரவை கலைக்கப்பட்டாலும் தனது பதவிக் காலம் முடியும் வரை ஜனாதிபதி பதவியை வகிப்பார். அமைச்சுக்களை, அமைச்சர்களின் எண்ணிக்கையை, அமைச்சின் விடயங்களைத் தீர்மானிப்பவர். எந்த வொரு அமைச்சின் விடயத்தையும் தான் விரும்பிய போது பொறுப்பேற்கலாம். அரசின் உயர் உத்தியோ கத்தர்களையும் வெளிநாட்டுத் தூதுவர்களையும் நியமனம் செய்பவர். பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாதவர்களுக்கும் வேறு அமைச்சு விடயங்களை ஒப்படைக்கலாம். முதலீட்டுச் சபை, தென்னிலங்கை அபிவிருத்தி அதிகாரசபை போன்ற நிறுவனங்களை தனது தனிப்பட்ட விருப்பத்திற்கு அமைய நிறுவலாம். யுத்தத்தை அல்லது சமாதானத்தை உத்தியோக பூர்வமாகப் பிரகடனப்படுத்தலாம். அவசரகால நிலை



காலனித்துவத்திற்குப் பிந்தைய இலங்கையில் ஆட்சி புரிந்த எந்த அரசும் அந்நாட்டின் சிறுபான்மை இனங்களின் உரிமைகளையோ நாட்டின் பன்மொழி, பன்மத, பல்லின, பல்கலாச்சாரத் தன்மைகளையோ ஒரு சாதகமான அமைவாகக் கண்டுகொள்ளாமல் பாராளுமன்ற ஜனநாயகம் என்பதன் பேரால் ஒரு எதேச்சாதிகார அரசியல் நியமத்தினை நோக்கிச் சென்று இன்றைய கட்டம்வரை கொண்டுவந்து விட்டுள்ளன. இன்று இலங்கையின் நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதிக்குரிய அதிகாரங் களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்: அரசுத் தலைவர், அமைச்சரவையின் தலைவர், முப்படை களின் தலைவர், அரசாங்கத்தின் தலைவர், தனது கட்சியின் தலைவர், சட்டமா அதிபரையும், உயர் நீதிமன்ற பிரதம நீதியரசரையும் நியமனம் செய்பவர், மற்றும் ஜனாதிபதிச் செயலகம், சமய விவகாரங்கள், நிதித் திட்டமிடல், பாதுகாப்பு, தேசத்தைக் கட்டி யெழுப்புதல் ஆகிய ஐந்து அமைச்சுக்களின் அமைச்சர்

மையைப் பிரகடனப்படுத்தலாம். தனது குடும்ப உறுப் பினர்களுக்கு அதியுயர் அரச பதவிகளை வழங்கலாம்.

இலங்கையின் இவ்வாறான இன்றைய யதார்த்த நிலையில், மேற்படி நிலைமைகள் ஏற்படக் காரணமான மூலகாரணிகளைப் புரிந்து கொள்ளாமல், அவை எவ் வகைத் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன என்பதை ஊடுசென்று நோக்காமல், அவை எவ்வாறு வரலாற்றின் சுமைகளாகவும், சுமுகமான தீர்வுக்கும், இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வுக்கும் மற்றும் அமைதிக்கும் அபிவிருத்திக்கும் தடங்கல்களாக இருக்கின்றன என்பதை நுணுகி அறியாமல், தீர்வு ஒன்றை எட்டுவதை நோக்கி நாம் நகர முடியாது.

இலங்கையின் அரசியல்சாசனங்கள்: ஒரு முரண்வளர்ச்சி

1505இல் இலங்கையில் காலனித்துவ ஆட்சி தொடங்குவதற்கு முன்னால் அங்கே கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று இராச்சியங்கள் இருந்தன. போர்த்துக்கீசருக்கும், ஒல்லாந்தருக்கும் முழு இலங்

கையினையும் கைப்பற்ற முடியவில்லை. பெருமளவில் இவர்கள் கரையோரங்களையே ஆண்டனர். 1802இல் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பு ஆங்கிலேயரின் கைகளுக்கு முற்றாக மாறியது. இந்தியாவில் இருந்ததைப் போன்று கிழக்கிந்திய கம்பனி மூலம் ஆட்சிபுரிவது போலல்லாது, அந்த ஆண்டிலேயே இலங்கை நேரடி பிரித்தானிய ஆட்சிக்குட்பட்ட முடிக்குரிய முதல் காலனித்துவ நாடாக ஆக்கப்பட்டது.

கண்டி இராச்சியத்தைப் பல சூழ்ச்சிகளின் மூலம் கைப்பற்றி, 1815ம் ஆண்டு கண்டிய ஆட்சித் தலைவர்களுடன் கண்டிய ஒப்பந்தம் செய்யப்பட்டது. கீழ்வரும் அந்த ஒப்பந்தம் 12 சரத்துக்களைக் கொண்டிருக்கின்றது .

1. கண்டி இராச்சியத்தின் சகலவகை அரசுரிமையும் மலபார் இன அரசனான ஸ்ரீவிக்கிரமராஜசிங்கனிடமிருந்து பறிமுதல் செய்யபப்டுகிறது.

2. அரசன் தோல்வியடைந்துவிட்டதாக இத்தால் உறுதிப்படுத்தப்படுவதோடு, முடியிறக்கம் செய்யப்பட்டு, அவனுக்கிருந்த இராச்சியத்தின் மீதான மரபு ரீதியான அரசுரிமை நீக்கப்படுவதுடன், இல்லாதொழிக்கப்படுகின்றது.

3. அவனுடைய சகல உறவினர்களில் ஆண்கள் அனைவரும் இத்தீவிலிருந்து நாடு கடத்தப்படுகின்றனர்.

4. பிரித்தானிய சாம்ராச்சியத்தின் இறைமையின் அடிப்படையில் 'அதிகாரம்' எனப்படுபவர்களுக்கும், திசாவைகளுக்கும், முகத்தலாக்களுக்கும், கோறளைகள், விதானைகள் மற்றும் விளிம்புநிலை அதிகாரிகளுக்கும் அவரவர் அதிகார நிலைக்குத் தக்கவாறு வழங்கப்படுகின்ற உரிமைகள், சலுகைகள் மற்றும் அதிகாரங்கள் நீங்கலாக காலனித்துவ அரசு அதன் ஆணையாளர்களின் மூலம் ஆட்சி நடாத்த அதிகாரம் வழங்கப்படுகின்றது.

5. பௌத்த மதம் மாற்றப்படக்கூடாதென்பதுடன் அதன் உரிமைகள் பேணிப் பாதுகாக்கப் படவேண்டும் என்பதும் இத்தால் உறுதிப்படுத்தப்படுகின்றது.

6. எல்லாவகைச் சித்திரவதைகளும் மற்றும் அங்கவீனர்களாக்குவதும் இத்தால் நீக்கப்படுகின்றது.

7. ஆணையாளர் மட்டுமே ஒரு நபருக்கு மரண தண்டனை வழங்கலாம். அத்துடன் அரசாங்கத்தால் உரித்து வழங்கப்பட்ட அரச பிரதிநிதி ஒருவரின் முன்னிலையிலேயே மரண தண்டனை நிறைவேற்றப்படலாம்.

8. நாட்டில் நடைமுறையில் இருந்து வருகின்ற வழக்கங்களுக்கேற்ப கண்டிய மக்களின் மீதான எல்லாவகை சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகள் தீர்க்கப்படும். எங்கே எப்போது அரசின் தலையீடு இவற்றுக்கு அவசியம் என்பதை அரசாங்கமே தீர்மானிக்கும்.

9. கண்டிய மக்கள் அல்லாதோருக்கான தீர்ப்புக்கள் பிரித்தானியச் சட்டத்தின் அடிப்படையில் வழங்கப்படும்.

10. மூன்று, நான்கு கோறளைகள் மற்றும் சப்பிரகமுவா இணைப்பு பற்றிய அறிவிப்பு இத்தால் நீக்கப்படுகின்றது.

11. இங்கிலாந்து அரசருக்குச் சேர வேண்டிய மற்றும் தீவின் உள்ளூர் சேவைகளுக்கான கொடுப்பனவுகள் யாவும் அறவாக்கப்படவேண்டும்.

12. வியாபாரம் மற்றும் வர்த்தகம் என்பன ஆணையாளரால் மட்டுமே வசதி செய்யப்படலாம்.

இந்த ஒப்பந்தத்தில் இருந்தே ஒரு கூட்டாட்சி முறையிலான தீர்வில் அன்றைய கண்டிய ஆட்சித் தலைவர்கள் நாட்டங் கொண்டிருந்ததை அறிய முடிகிறது.

1927ம் ஆண்டு டொனமூர் அரசியல் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கும், பின்னர் 1947ம் ஆண்டில் சோல்பெரி (அரசியல் யாப்பாக்க) ஆணைக்குழுவுக்கும் கண்டியத் தலைவர்களே சமஸ்டி அடிப்படையிலான அரசியலமைப்பைப் பரிந்துரை செய்தனர்.

அவர்களின் பரிந்துரை பின்வருமாறு அமைந்திருந்தது: போர்த்துக்கேயரின் வருகைக்கு முன் இலங்கை றுகுணு, மாயா, பிஹீதி ஆகிய மூன்று இராச்சியங்களாகப் பிரிந்திருந்தது என்பதால் தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு - கிழக்கு மாகாணங்கள், கண்டி மாகாணம், கரையோரச் சிங்களவர்கள் வாழும் தெற்கு-மேற்கு மாகாணங்கள் என்ற சுய ஆட்சி பொருந்திய மூன்று இராச்சியங்களாகப் பிரிக்கலாம் என்றும் இதன்மூலமே ஒரு இராச்சியம் இன்னொரு இராச்சியத்தின்மீது அதிகாரம் செலுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

1833இல் இலங்கையில் ஹோல்புறூக் அரசியல் சீர்திருத்தம் மூலம் சட்ட சபை ஒன்று உருவாக்கப்பட்டு, படிப்படியாக சுதேசிகளும் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள். 1889இல் இருந்தே கண்டிய மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு சட்டசபை இருப்புக் கிடைத்தது. பின்னர் சிறுசிறு சீர்திருத்தங்கள், மாற்றங்கள் 1910, 1921, 1924 ஆகிய ஆண்டுகளில் முறையே குறுமக்கலம், மன்னிங், மன்னிங்- டெவொன்சையர் ஆகியவர்களால் கொண்டுவரப்பட்டன. கல்வியும் செல்வமும் உடைய ஆண்களுக்கு மட்டும் வழங்கப்பட்ட வாக்குரிமையின் மூலம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை 1910இல் அறிமுகப்படுத்தப்பட்டு 1912இல் நடந்த முதலாவது தேர்தலில் இலங்கை மக்களின் பிரதிநிதியாக பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். இலங்கையர்களின் முதல் அரசியல் கட்சியான இலங்கைத் தேசிய காங்கிரஸ் 1919இல் ஆரம்பிக்கப்பட்டு பொன்னம்பலம் அருணாசலம் என்ற தமிழரே அதன் முதல் தலைவரானார். இந்திய தேசிய காங்கிரஸ் சுயராஜ்யக் கோரிக்கை வைப்பதற்கு முன்பாகவே இலங்கைத் தேசிய காங்கிரஸ் பூரண சுதந்திரம் பற்றிச் சிந்தித்தது. ஆனால் சிங்களத் தலைவர்கள் இவ்வியக்கத்தைச் சிங்களவர்களுக்கான இயக்கமாகவே கண்டனர். இதனால் பொன்னம்பலம் அருணாசலம் அதிலிருந்து விலகிப் பின் சில காலங் களில் மறைந்துவிட்டார்.

டொனமூர் ஆணைக்குழுவின் அரசியல் சீர்திருத்தத்தினால் 1931இல் இலங்கையில் சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டு 1933இல் முதலாவது சட்டசபைத் தேர்தல் நடைபெற்றது. அன்றைய முழுச் சுதந்திரத்தை கோரிக்கையாக்கி காந்திய வழி நின்று சமூகப் புரட்சியினை முன்நிபந்தனையாக்கி 1924இல்

ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் 1936இல் நடைபெற்ற தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு அறைகூவல் விட்டதைத் தொடர்ந்து கணிசமான தமிழர் சட்டசபைப் பிரதிநிதிகளாக ஆக்கப்பட வில்லை. இரண்டாம் உலகமகாயுத்தம் காரணமாக அடுத்த தேர்தல் 1947இலேயே மீண்டும் நடைபெற்றது. 1947இல் சோல்பரியின் யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டு 1948இல் சுதந்திர யாப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மலையக மக்கள் தமிழர்கள் என்பதாலும், அவர்கள் கடந்த தேர்தல்களில் இடதுசாரிகளை ஆதரித்தார் கள் என்பதாலும் 1949இல் அவர்களது பிரஜாவுரிமை பறிக்கப்பட்டு நாடற்றவர்கள் ஆக்கப்பட்டனர். 1956இல் கொண்டு வரப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் எதிர் காலத்தில் நாட்டைச் சீரழிக்க காரணமாக அமைந்தது. இவையும் இன்னும் இவைபோன்றவையும் சோல்பரியின் யாப்பில் சிறுபான்மை இனங்களின் பாதுகாப்புச் சட்டம் என்று கருதப்பட்ட 29வது சரத்தின் உட்பிரிவில் காணப் பட்ட சட்டத்திற்கு முரணாகவே கொண்டுவரப்பட்டன. இதற்கெதிராக கோமறைக் கழகம் (Privy council) வரை சென்ற கோடீஸ்வரன் வழக்கு, ரணசிங்க வழக்கு போன்றவைகள் மூலம் நிரூபணமாகிய பாராளுமன் றத்தின் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் பற்றிய புதிய விளக்கங்கள், 1972இல் உருவாக்கப்பட்ட புதிய குடியரசு யாப்பு கொண்டு வருவதற்கு பலவற்றில் ஒரு காரணியாக அமைந்திருக்கலாம். முதலாவது குடியரசு யாப்பில் பௌத்தம் முதன்மை மதமாக ஆக்கப்பட்டது.

அரசியல் சாசனம் என்பது ஆளப்படுபவர்களிடமி ருந்து முழுஅளவிலான அதிகாரத்தினைப் பெறுகின்ற அரசின் உரிமைப் பத்திரம். அரசின் வடிவத்தை அதுவே ஒழுங்கமைப்பதுடன் அரசின் நோக்கம், அதன் ஒவ் வொரு திணைக்களத்தினதும் அதிகாரம், அரசாங்கம் – சமூகம் என்பவைகளுக்கிடையிலான உறவு, அரசினர் நிறுவனங்களுக்கிடையிலான உள்ளார்ந்த உறவுகள் மற்றும் அரசதிகாரத்தின் எல்லைகள் ஆகியவற்றைத் தீர்மானிக்கின்றது. அதனால் ஒரு சிவில் சமூகத்திற்கும் அதனது அரசதிகாரத்திற்கும் இடையிலான ஒரு அடிப்படையான உடன்படிக்கை என்று கொள்ளப்படும். ஒரு யாப்பினது வளர்ச்சி என்பது அதன் தேசிய ஒருமைப்பாட்டு வளர்ச்சியே. ஆனால் இலங்கையில் அதனை ஒரு முரண்வளர்ச்சியாகவே காணலாம். ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினது அரசாங்க மானது ஐந்தில் ஆறு பெரும்பான்மை அங்கத்தவர் களை 1977இல் தேர்தலில் பெற்றபின் இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பு 1978இல் இருந்து நடை முறைக்கு வந்தது. இது 17 சட்டச் சீர்திருத்தங்களுடன் இன்று நடைமுறையில் இருக்கின்றது. ஜனாதிபதி முறைக்கு மாற்றீடான பதிலீடாக பாராளுமன்றம் சார்ந்த மந்திரி சபை ஆட்சி ஒன்று ஏற்படுத்தப்பட்டாலாயே முதலில் அதிகாரங்கள் பரவலாக்கப்படலாம். தென் பகுதி மக்களின் மனங்களில் ஆழமாக வேரூன்றி இருக்கும் தம்மதீபக் கோட்பாடு இலங்கையின் இன்றைய அரசியல் போக்குக்கு எவ்வளவுதூரம் காரணமாக அமைகின்றது என்பது மேலும் ஆய்வுக்குரியது. தம்மதீபக் கோட்பாடு என்பது இலங்கை புத்த மதத்தின் பொருட்டு கௌதமபுத்தரால் தேர்ந்தெடுக்கப்பட்ட தீவு என்றும் அதன் முதல் மனிதன் விஜயன் என்றும் அவனும் அவனது வழித்தோன்றல்களும் புத்தமதத்தினைக் காப்பதற்கென்றே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்றும் கட்டமைக்கப்பட்டுள்ளது. அரசு என்பதும் அவனுட னேயே தோற்றம் பெறுகின்றது.

(பிற்சேர்க்கை : யோகரட்ணம்:

1. 56ம் ஆண்டு கொண்டு வந்த சிங்களமொழிச் சட்டத்தில் ஒரு உபபிரிவொன்று வந்தது. அதை நீங்கள் இதில் குறிக்க மறந்து விட்டீர்கள். தமிழ்மொழி விசேட பிரிவு. இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் தனிச் சிங்களச்சட்டம் மட்டும் கொண்டுவரப்பட்டதான ஒரு உணர்வை நாங்கள் கொடுக்கிறோம்.

2. 72ம் ஆண்டு யாப்பில் பௌத்த மதம் அரச மதமாக் கப்படவில்லை. அரசியல் யாப்பு தயாரிக்கப்பட்டபோது அரசியல் நிர்ணயசபை ஒன்றைக் கொல்வின் ஆர். டி. சில்வா கூட்டி இருந்தார். எங்களுடைய தமிழ்த் தலை மைகள் அந்தச் சந்திப்பிற்குப் போவதற்கு மறுத்துவிட் டார்கள். மாறாக தமிழ்க் கட்சியின் யாழ்ப்பாணப் பகுதி மேயராக இருந்த உயர்நீதிமன்ற நீதியரசர் சி. எக்ஸ். மார்டடின் போய்ச் சேர்ந்தார்.

3. ஜே.ஆரின் புதிய அரசியல் யாப்பில் அரச மதம் பௌத்தம் எனக்கொண்டு வரப்பட்டபொழுது தமிழரசுக் கட்சியினரே அதற்கு ஒத்துக் கையொப்பமிட்டார்கள்.

நிகழ்வில் இரண்டாவதாக வி. சிவலிங்கம் அவர் கள் இதுவரை முன்மொழியப்பட்ட தீர்வுகளும் அவற் றின் விபரங்களும் மற்றும் தற்போது சர்வகட்சி மகா நாட்டில் முன் வைக்கப்பட்ட தீர்வுகள் என்பது குறித்து பேசினார்.

சிவலிங்கம்: கொழும்பில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முந்நூறுக்கும் மேற்பட்ட தமிழர் களை மீண்டும் அந்தந்த இடங்களிற்கு திருப்பி அனுப் பப்பட்ட தகவல் கிடைத்த கணத்தில் நின்று பேசு கிறோம். இது குறித்த மனித உரிமை அமைப்புகளின் தீவிரமான செயற்பாடும் வழக்குத் தாக்கலும் அரசைப் பணிய வைக்கும் ஒரு நிலைக்குக் கொண்டு வந்திருக் கின்றது. இதை நான் ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால் நாங்கள் இதற்குத் தீவிரமான நடவடிக்கை எடுக்காமல் இருந்திருந்தால் அரசின் நிலைமைகள் இன்னும் மோசமான நிலைக்குப் போயிருக்கக்கூடும். நாங்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு அரசியல் கருத் துக் கொண்டவர்களாக வெவ்வேறு அமைப்பைச் சார்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால் சில விடயங் களில் தீர்க்கமான ஒரு முடிவை எடுக்க வேண்டிய காலகட்டத்துக்கு வந்திருக்கின்றோம்.

சர்வகட்சி மாநாட்டுக் குழுவுக்கு தரப்பட்டிருக் கின்ற தீர்வுத் திட்டங்கள் பற்றிய கருத்துகள் என்பது தலைப்பு.

சர்வகட்சி மாநாட்டுக் குழுவிற்கு சிறீலங்கா சுதந் திரக் கட்சி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, கல்விமான்கள் குழு - திஸ்ஸ விதாரணவின் அறிக்கை, தமிழீழ மக்கள் விடுதலைப்புலிகளின் தீர்வு அறிக்கை - இப்படியாக கிட்டத்தட்ட 13 கட்சிகள் இந்தத் தீர்வுத் திட்டங்களைச் சமர்ப்பித்திருக்கின்றன.

# இலக்கியச்சந்திப்பு

நான் முக்கியமான ஒரு தீர்வுத்திட்டம் பற்றிப் பேசுகிறேன். இங்கு கூடியிருக்கும் நாங்கள் ஒன்றும் பெரிய கல்விமான்கள் அல்ல. இங்கு கூடியிருக்கிற வர்கள் அனைவரும் அன்றாட வாழ்க்கைப் போராட்டத் திற்கான சிக்கலில் மாட்டிக் கொண்டிருப்பவர்கள். எப்படி இருப்பினும் தாயகம் தொடர்பான சிந்தனைகள் எந்தக் கணத்திலும் எங்களை விட்டு அகலாதிருக்க முடியாதபடி எங்களது இருப்பு அமைந்துள்ளதாலும் இதுபற்றி எங்கள் உள்ளக் கிடக்கைகளைப் பேசத் தள்ளப்பட்டிருக்கிறோம்.கடந்த ஜனாதிபதித் தேர்தல் இரண்டு முக்கியமான விடயங்களை முன்வைத்து நடைபெற்றது. ஐ. தே. கட்சி சார்பில் ரணில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வையும் மகிந்த ஒற்றையாட்சி யின் கீழான தீர்வையும் சொன்னார்.

அனைத்துத் தமிழர்களும் ரணிலுக்கு வாக்களித்து தங்கள் வர்க்க விசுவாசத்தைக் காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. மாறாகத் தேர்தலுக்குச் சில தினங்களுக்கு முன்பாக தமிழர்கள் வாக்குச் சாவ டிக்குச் செலவதற்கான தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. தமிழர்களுடைய இறைமையை நாங்கள்தான் பாதுகாப்போம் என்கிற வாதம் கிளப்பப்பட்டது. சிங்கள அரசாங்கம் எங்களுக்கு ஒன்றும் செய்ய முடியாது. தமிழருக்கான அரசு எங்களிடம் உள்ளது என்றார்கள். சமஷ்டி அடிப்படையிலான தீர்வைக் கூறிய ரணிலுக்கு வாக்களிக்கும் தமிழ் மக்களைத் தடுப்பதற்கு எத்தனை



கோடி ரூபாய்கள் கையளிக்கப்பட்டன, அதன் பின்னான சூழ்ச்சிகள் என்பன அம்பலத்திற்கு வரும் நாள் வெகு துாரத்தில் இல்லை. இந்த அரசியல் தீர்வு பற்றி இந்தக் காலகட்டத்தில் பேசுவதற்குரிய முக்கியமான தெரிவு என்ன?

இதில் முக்கியமானது என்னவென்றால் போராட்டம் பலவீனப்பட்டுக் கொண்டுவருகிறது. அங்கு வாழ்கின்ற ஒவ்வொரு தமிழர்களும் நாட்டைவிட்டு எப்போது வெளி யேறலாம் என்ற நிலையிலும் தங்கள் உயிரை எப்படிப் பாதுகாப்பது என்ற மன உளைச்சலுடனும்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இலட்சக் கணக்கானவர்கள் தினமும் அகதிகளாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார் கள். ஒரு புறம் அரசு, பயங்கரவாதத்தை ஒழிக்கிறோம் என்று சொல்லி அகதி அலையைப் பெருப்பித்துக் கொண்டிருக்கிறது. காலம்காலமாகக் காக்கப்பட்டு வந்த கலாச்சாரங்கள் இப்போது அகதி முகாம்களுக் குள் வேறுபல வடிவங்களை எடுத்து வருகின்றன. உதாரணத்துக்கு இன்று பதினாறு பதினேழு ஆண்டு களாக புத்தளத்தில் வாழும் முஸ்லிம்கள்.

ஜனநாயகத்திற்கான மாற்றத்தைக் கோரி நிற்பவர் களுக்கு திஸ்ஸ விதாரண அறிக்கை அதற்கான வடி வங்களைக் கொண்டிருக்கிறது. இது இரண்டு முக்கிய மான சம்பவங்களைக் குறிப்பிடுகின்றது.

ஒன்று, சிறுபான்மை இனங்களுடைய பாதுகாப்பு எவ்வாறு உறுதி செய்யப்படவேண்டும் என்பது. அதில் சமஷ்டி என்ற சொற்பிரயோகம் பாவிக்கப்படாவிட் டாலும் அத்தீர்வுக் கொள்கைகள் சமஷ்டி அடிப்படை யிலானது.

இரண்டு அதிகார மையங்கள்பற்றிப் பேசுகிறது. மாகாண அமைப்பு, மத்திய அரசு. மாகாண அமைப்பிலும் மத்திய அரசிலும் சிறுபான்மை இனத்தின் பிரதிநிதித் துவம் வலியுறுத்தப்படுகிறது. அதிகாரப் பரவலாக்கம், அதிகாரப் பகிர்வு என்பனவற்றின் மூலம் சிறுபான்மை இனங்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. சமீபத்தில் அமெரிக்காவின் இரண்டு முக்கியஸ்தர்கள் இலங்கைக்குச் சென்றிருந்தார்கள். ரிச்சர்ட் பௌஸர் என்ன சொல்கின்றார் என்றால் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளும் வன்முறைகளும் நிற்பாட்டப்பட வேண்டும். அதேநேரம் அரசாங்கமும் அதிகாரப் பரவலாக்கல் மூலம் இவற்றைச் சீரமைக்க வேண்டும். ஒரு பத்திரிகை நிருபருக்கு அமெ ரிக்கத் துாதுவர் அளித்த பேட்டி ஒன்றில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு சமஷ்டி அரசு தான் என்று கூறுகின்றார். உங்களுடைய தீர்வைப் புலிகள் ஏற்காவிடில் அப்போது என்ன செய்வதென்று கேட்பதற்கு அவர் சொல்கின்றார். புலிகளுடைய கட்டுப்பாட் டில் இருக்கின்ற தமிழ் மக்கள் மிகவும் ஒடுக் கப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் அரசியல் ரீதியாக என்ன பேசுவார்கள் என்பது எமக் குத் தெரியும். ஆனால் புலிகளின் கட்டுப்பாட் டிற்கு அப்பாலிருக்கும் தமிழ் மக்கள் - அதா வது தமிழ்ப் பிரதேசங்களிலும் சிங்களப் பிரதேசங்களிலும் வெளிநாடுகளிலும் வாழு கின்ற தமிழ் மக்கள் இவர்கள்தான் பெரும்பான்மை. இவர்கள் ஏற்கின்ற ஒரு தீர்வை அரசு முன்வைக்க வேண்டும். அதாவது சர்வகட்சி மாநாடு இந்தத் தீர்வை வைக்க வேண்டும். அவர் தெளிவாகச் சொன்னார்: புலிகளை விட்டு விடுங்கள். நீங்கள் இந்தப் பெரும் பான்மைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை வையுங்கள். அப்போது அவர்களின் எதிர்காலம் தானாகவே தீர்மானிக்கப்பட்டு விடும்.

நாங்கள் வெறுமனே புலிகளுக்கு எதிராகவோ வேறு அமைப்புகளுக்கு எதிராகவோ பேசிக்கொண்டி ருப்பதில் அர்த்தமில்லை. நாங்கள் தீர்வுத்திட்டம் பற்றி, முக்கியமாக, திஸ்ஸ விதாரணவின் தீர்வுத்திட்டத்தை எப்படிப் பார்ப்பது என்பது பற்றியும் அதனை எப்படி முன்னெடுப்பது என்பது பற்றியுமான விவாதங்களிலும்

அது பற்றிய கருத்துப் பரிமாற்றங்களிலும் வெகுதீவிரமாகவும் இறுக்கத்துடனும் பயணம் செய்ய வேண்டும்.

பஷீர்: இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது இது ஒரு பக்கப் பிரச்சினையா? ஒன்றுக்கு மேற்பட்ட பிரச்சினையா? ஒட்டுமொத்தமாக தமிழ்த் தரப்பு என்று சொல்லப்படுபவர்கள் என்று இல்லாமல் முஸ்லிம்கள், தலித்துகள், பெண்கள் என்று சொல்லப்படுபவர்கள் அதாவது பிரச்சினையின்மீது அக்கறை உள்ளவர்களில் யாரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது? தீர்வுகள் என்பவை எவ்வாறு முஸ்லிம்களைப் புறக்கணித்ததோ தலித்துகள் பிரச்சினைகளை உள்ளெடுக்கவில்லையோ அப்போதே அதனை ஒரு ஜனநாயக மறுப்பாகத்தான் கொள்ள முடியும். இப்படி ஒவ்வொரு பகுதியினரதும் அபிலாஷைகளையும் உள்ளடக்காத தீர்வுகள் வெறும் திணிக்கப்படும் தீர்வுகளாகத்தான் பார்க்க முடியும்.

நான் ஒரு முஸ்லிமாகப் பேசுகிறேன். அப்போதில் இருந்து இப்போதுவரையிலுமான சகல பேச்சுவார்த்தைகளிலும் முஸ்லிம்களின் பங்களிப்பு மறுக்கப்பட்டு வந்துள்ளது.

இப்போது APRC - சகல கட்சிப் பிரதிநிதிகள் குழு, பெரும்பான்மை அறிக்கை. பிறகு அந்தப் பெரும்பான்மை அறிக்கையில் ஒரு சிறுபான்மை அறிக்கையாக இந்த வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றி வருகிறது.

இப்போது முஸ்லிம்கள் எங்கே நிற்கிறார்கள்? அவர்களுடைய நிலை என்ன? அவர்கள் தங்களுடைய தரப்பில் இருந்து இந்த APRC அமைப்பிற்கு ஏதாவது விடயங்களைத் தீர்வு சம்பந்தமாக வழங்கியுள்ளனரா? கிழக்கு முஸ்லிம் முன்னணி ஒரு அறிக்கையைத் தயாரித்திருப்பதாக சில இணையத் தளங்களில் வெளிவந்துள்ளன. இன அடிப்படையிலான (சிங்கள/தமிழ்/முஸ்லிம்) தனி அலகுகளை வழங்குவதை அது எதிர்க்கிறது. தமிழ் - சிங்கள - முஸ்லிம் மக்களின் ஒற்றுமை கிழக்கில் உறுதிப்படுத்தப்படும் வகையில் அதிகாரப் பகிர்வுகள் இருக்கவேண்டும்.

மதசார்பு, மதங்களைப் பாதுகாக்க வேண்டும். எல்லா மதங்களையும் ஒரேயளவு முக்கியத்துவத்துடன் பாரபட்சமற்றுப் பாதுகாத்தல். சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெரும்பான்மை அறிக்கை வருவதற்கு முன்பாக ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அது உண்மையில் ஒரு ஆபிரிக்கச் சட்டவல்லுநரால் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. முஸ்லிம்களுக்கான ஒரு தனிஅலகை அது வலியுறுத்துகிறது.

வடகிழக்கு இணைப்பு-பிணைப்பு பிரச்சினையை இன்றைக்கு எடுத்தால், இதற்கு முஸ்லிம்கள் ஒரு தடைக்கல்லாக இருக்கின்றார்கள். எப்படி என்று பார்த்தால், புலிகளைப் பொறுத்தவரை முஸ்லிம்களை வடக்கில் இருந்து விரட்டியாகிவிட்டது. கிழக்கிலே விரட்டப்போனார்கள். முடியவில்லை. முஸ்லிம்கள் இல்லாதிருந்தால் வடக்கு கிழக்கு என்னும் பாரிய பிரதேசத்தை தமிழ் அரசாக இலகுவில் செய்யலாம் என்பது புலிகளிற்கு உவப்பான விடயம்.

சிங்களவர்களால் தமிழர்கள் எவ்வளவு தூரம் ஒடுக்கப்படுகிறார்கள் என்று தமிழ் மக்கள் கருதுகிறார்களோ அந்தப் பரிமாணத்திற்கு எந்த வகையிலும் குறைவில்லாது தமிழர்களால் முஸ்லிம்கள் ஒடுக்கப்படுவதை முஸ்லிம்கள் உணர்கின்றார்கள். இது வரலாறு கடந்து வந்த பாதை. தமிழ்பேசும் மக்கள் என்ற வரையறைக்குள் தங்களை அடையாளம் கண்டு கொண்டிருந்த முஸ்லிம்கள் ஏன் அதிலிருந்து மெது மெதுவாக விடுவித்துக்கொண்டு ஒரு தனி அடையாளத்தைக் கோரும் நிலைக்கு வந்தார்கள் என்பதை வரலாற்றுரீதியான சம்பவங்களைக் கொண்டு பார்க்க வேண்டும். தமிழீழக் கோரிக்கைப் போராட்டத்திற்குத் தங்களை இணைத்துக் கொண்டு போராடப் புறப்பட்ட எத்தனையோ முஸ்லிம்களைப் புலிகள் பலி கொடுத்திருக்கிறார்கள். இது மிகவும் கொடுமையானது. எனவே இவர்களை இருட்டடிப்புச் செய்துவிட்டு நாங்கள் எந்த ஒரு தீர்வு பற்றியும் பேசமுடியாது.

ஒவ்வொரு இலக்கியச் சந்திப்பிலும் வடக்கில் இருந்து முஸ்லிம்களை புலிகள் வெளியேற்றியதற்கான கண்டனத்தைத் தெரிவிக்கிறோம். இங்கு தீர்மானங்களை நாங்கள் தொடர்ச்சியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கலாம். ஆனால் யதார்த்தம் என்னவென்றால், இத்தனை வருட காலமாக எதுவும் நடக்கவில்லை என்பதும், யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்களின் பாரம்பரிய நிலங்கள் விலைபோய்க் கொண்டிருக்கிறது என்பதும்தான். இது புலிகளின் வெற்றி என்று தமிழர்கள் ஒருவேளை கொள்ளலாம். கிழக்கிலும் எத்தனையோ வழிகளைப் பிரயோகித்து இப்படியான ஒரு வெளியேற்றத்துக்கு முயற்சித்தார்கள். ஆனால் இன்று இராணுவத்தின் வெற்றியினால் அப்பகுதி மக்கள் இப்போது நிம்மதியாக மூச்சு விடுகின்றார்கள். இதை நான் இந்த இடத்தில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். (மூதூர் வெளியேற்றம் பற்றிய ஆவணக் கட்டுரையை http://uyirnizhal.com/pathivugal.htmஇல் பார்வையிடலாம்) யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறாத தமிழர்கள் சிங்களவர்களை அரக்கர்களைப் போன்று பார்க்கும் தன்மையை உருவாக்கி இருக்கிறோம். இனி முஸ்லிம்கள் பற்றியும் அப்படியானதொரு நிலையைத்தான் தொடர்ந்து வந்த இந்த வரலாற்றுப்பாதை வழிவகுப்பதை எதிர்காலத்தில் காண முடியும். முஸ்லிம்கள் என்ற அடிப்படையில் அவர்களிடம் தமிழ்பேசும் மக்கள் என்று சொல்லி எடுக்கப்படும் எந்த முடிவுகளையும் திணிப்பதை அனுமதிக்க மாட்டோம். எங்களுடைய இறுதி மூச்சுவரை இதற்கான ஜனநாயகப் போராட்டத்தில் நாங்கள் ஈடுபடுவோம்.

எம்.ஆர். ஸ்ராலின்: தமிழ்ச் சமூகத்தை ஒற்றைப் பரிமாணத்தில் புலிகள் பார்ப்பதைப் போல் பார்க்கப் போகிறோமா? அவர்கள் சொல்கிறார்கள் உங்களுக்கு இப்ப ஏதாவது பிரச்சினை என்றால் அடக்கி வாசியுங்கோ. அதெல்லாத்தையும் தமிழீழப் பாராளுமன்றத்தில் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று. இலக்கியச் சந்திப்பானது நுண்தளங்களில் பிரச்சினைகளை விவாதிக்கும் ஒரு களமாகச் செயற்பட்டு வருவதைத் தொடரும் போக்கில் விவாதங்கள் அமையவேண்டும். முஸ்லிம்கள், தலித்துகள், கிழக்கு மக்கள் மற்றும் பெண்கள் இவர்கள் எல்லோரினதும்



பிரச்சினைகளுக்கான ஒரு தீர்வுத்திட்டத்தைத்தான் சிங்கள அரசிடமோ சர்வதேசத்திடமோ முன்வைக்க வேண்டும். வரலாற்றுரீதியாகப் பார்க்கும்பொழுது கிழக்கு மாகாணம் எப்போதுமே தமிழர்களுக்கு மட்டுமேயான பாரம்பரியப் பிரதேசமாக இருந்ததில்லை. மேலும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அறிக்கையில் மட்டும்தான் பெண்களுக்குரிய இடஒதுக்கீடு பற்றிக் கதைத்திருக்கிறார்கள். ஆனால் சிங்கள முஸ்லிம் மக்களுக்கான சுயாட்சிபற்றி எதுவும் பேசவில்லை. கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் அது தனியே பிரிந்தால் அங்கு தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பிரச்சினைகள் தோன்றுவதற்கான வாய்ப்பில்லை. இன்றுவரை அப்படியொன்று நடந்ததாக சரித்திரமும் இல்லை. கிழக்கில் தமிழ்த் தேசிய வரவுக்குப் பின்புதான் இந்தப் பேதங்கள் இங்கு உருவாகிப் பின்பு கூர்மையடைந்தது.

தேவதாசன்: இன்றைக்கு குறிப்பாக யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை 4 அல்லது 5 இலட்சம் மக்கள்தான் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதிகமான வீதமானவர்கள் தலித்துகளாகத்தான் இருக்கின்றார்கள். தலித் மக்களின் வாழ்க்கைக்கு உத்தரவாதத்தைத் தரக்கூடிய ஒரு தீர்வுத்திட்டத்தை முன்மொழிவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். தமிழீழம் கேட்டுவிட்டு வெளிநாட்டுக்கு ஓடிவந்து வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்மக்களின் விருப்பங்களிற்கேற்ற மாதிரி நாங்கள் இந்தத் திட்டத்தை அணுக முடியாது. மதக்கல்வி முற்றாக அகற்றப்படவேண்டும். தலித்துகளுக்கான இந்தத் தீர்வுகளையும் நீங்கள் உங்கள் தீர்வுத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளாவிடின் அது பூரணமானதொன்றல்ல.

தனபால்: எல்லோரும் திருப்திப்படக்கூடிய தீர்வு என்பதற்கும் நியாயமான தீர்வு என்பதற்கும் இடையிலான வேறுபாட்டைப் புரிந்துகொண்டு நாங்கள் பேச வேண்டும்.

ராம்ராஜ்: திஸ்ஸவிதாரண அறிக்கையில் வடக்கு-கிழக்குப் பிரச்சினையோ அல்லது ஏனைய பிரச்சினைகளையோ பற்றிப் பேசப்படாமல் இருப்பதற்கான காரணம், அவற்றைக்கொண்டு வந்தால், APRCஇல் எடுக்கப்படவேண்டிய தீர்மானங்கள் நிறைவேறுவதற்கு இன்னும் அதிக காலம் இழுத்தடிக்கப்பட்டு விடுமோ என்ற பயம்தான் காரணம். வடக்கு-கிழக்கில் உள்ள மக்கள்தான் இணைப்பு பிரிப்புப் பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டும். இப்போதைய பிரிப்பு சிங்கள அரசியல் தலைமைகளின் அரசுக்குச் சாதகமான ஒரு காய் நகர்த்தல் என்றுதான் இதனைக் கொள்ள வேண்டும். புலிகள் எப்போதும் ஒரு அரசியல் தீர்வுக்கு வரமாட்டார்கள் என்பது தெரிந்த விடயம். அதனை அரசும் புரிந்து கொண்டு காலத்தைக் கடத்துகின்றது. இந்தச் சூழலில் புலம்பெயர் வாழ் ஜனநாயக சக்திகள்தான் இதனை முன்நகர்த்துவதற்கான உந்துதலைச் செய்வதில் தங்கள் பங்களிப்பை முக்கியமாக வழங்க வேண்டும்.

யோகரட்ணம்: ஆய்வுகள் தீர்வுகள் முதலியவற்றில் ஈடுபடுபவர்கள் வரலாறுகளை செய்திகளை மறைக்காது தெளிவாக வெளிப்படுத்த வேண்டும்.

பகவத்சிங்: புகலிடத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாங்கள் இவ்வளவு காலமும் இலங்கையில் நடக்கும் விடயங்கள் தொடர்பாக பேசித் தீர்வுகளைக் கொண்டு வர ஒரு குழு அல்லது ஒரு தலைமையை உருவாக்கி ஒரு அழுத்தத்தைக் கொடுக்கத் தவறி இருக்கிறோம். இளம் தலைமுறையினருக்கு இவற்றை எடுத்துச் சொலவதற்கான வழிவகைகளை உருவாக்குவதற்கு எதிர்கால சந்ததி எப்படி வாழ வேண்டும் என்பதற்கான வழிவகைகளை இலக்கியச் சந்திப்பு போன்றவை வழிவகுக்கும் என நம்பகிறேன்.

கிருஷ்ணா: நாங்கள் சில நாட்களில் இலங்கையில் போய் இறங்கி புரட்சி செய்வதுபோல் கதைத்துக் கொண்டிருக்கிறோம். அங்கு இப்போது ஆயிரக்கணக்கானவர்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள். அதனை எப்படி உடனடியாக நிற்பாட்டுவது, அதற்கு நாங்கள் இப்போது என்ன செய்யவேண்டும் என்பதைத்தான் நாங்கள் முதலில் யோசிக்க வேண்டும்.

அசோக்: எங்களுடைய விருப்பங்கள் என்பதும் யதாரத்தம் என்பதும் வேறுவேறு. நாங்கள் வைக்கும் தீர்வுகள் ஏற்றுக்கொள்ளப்படப் போவதில்லை. ஏனெனில் அதற்கான அதிகாரங்கள் எந்தத் தமிழ்த் தரப்பிடமும் இல்லை. ஆனால் பிரேரிக்கப்பட்டிருக்கும் தீர்வுத் திட்டத்தில் உள்ள மோசமானவற்றைக் விலக்க முயற்சிக்கலாமே ஒழிய அதை நடைமுறைப்படுத்தும் பக்கத்தில் நாங்கள் இல்லை. இதை நாங்கள் முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும். முஸ்லிம்கள், தலித்துகள், பெண்கள் என்பவற்றைப் பற்றிப் பேசுபவர்கள் தமிழ்த்தரப்பினர். ஆனால் இத்தீவுக்கான கோரிக்கையை நாங்கள் தேசியமட்டத்தில் சிங்கள அரசிடம் கையளிக்கிறோம். எனவே ஒரு தீர்வு வந்தபின் இரண்டாவது கட்டப் போராட்டமாகத்தான் ஏனையவற்றைக்

கொள்ள முடியும். இது யதார்த்தம். இவற்றை விளங்கிக் கொள்கின்ற அதேவேளை இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் துரிதப்படுகின்ற தீர்வொன்றை நாங்கள் எட்டுவதற்கான குறைந்த பட்ச முயற்சிதான் திஸ்ஸவிதாரண தீர்வுத் திட்டத்தின் மீதான பார்வைகள். பஷீர் சொன்னார் கிழக்கு மக்கள் இப்போது நிம்மதியாக மூச்சுவிடுவதாக. அவர்கள் அங்கு இப்போது வேறு ஆயுதக்குழுக்களால் துன்புறுத்தப்பட்டு வருகிறார்கள். எனவே கிழக்கில் ஒரு மேலாதிக்க சக்தி இப்போது வளர்ந்துகொண்டு வருகின்றது. ஆயுதக்குழுக்கள் இருக்கும்வரை யாரும் நிம்மதியாக வாழமுடியாது. விடுதலைப்புலிகள் சென்றிருக்கலாம். ஆனால் அந்த இடத்தை நிரப்ப இப்போது பிள்ளையான்குழு கருணா குழு என்ற எத்தனை குழுக்கள். அங்கு வடக்கு கிழக்கில் வாழும் மக்களுக்கான ஜனநாயக வெளியை உருவாக்கிக் கொடுக்கவேண்டிய குறைந்தபட்ச கடப்பாட்டில் நாங்கள் இருக்கின்றோம்.

உமா: விளிம்புநிலை மக்களின் அபிலாஷைகளைப் புறந்தள்ளிய ஒரு தீர்வை நோக்கி நாங்கள் அணுகுவதன்மூலம் என்ன சொல்ல வருகிறோம் என்றால் இவ்வளவு காலமும் இலங்கை அரசு எங்களிற்கு எதைச் செய்ததோ அதையே நாங்கள் இன்னொரு வடிவத்தில் இப்போது செய்கிறோம். மேலும் பெண்கள் என்பவர்கள் தனியே தமிழர்களால் மட்டும் ஒடுக்கப்படுவதல்ல. முழுச் சமூக அமைப்பினாலுமே ஒடுக்கப்படுபவர்கள். தீர்வு என்ன வடிவில் வந்தாலும் விளிம்புநிலை மக்களின் போராட்டம் என்பது தவிர்க்க முடியாதது.

பரா: திஸ்ஸ விதாரண அறிக்கை பற்றிய விளக்கத்தைக் கொடுத்து, தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு வரும்போது விசேட விடயங்களுக்கான குழுக்களை அமைத்து விவாதத்திற்கு விடப்பட வேண்டும்.

சிவலிங்கம்: வெவ்வேறு பரிமாணங்களில் ஒரு விடயத்தைப் பார்க்கும்போது குழப்பங்கள் வருவது சகஜம். முன்பு யோகரட்ணம் குறிப்பிட்டதுபோல, நோயாளியைக் குணப்படுத்துவதென்பது சரிதான். ஆனால் Operation success patient is dead என்ற நிலைக்கு வராதவாறு கவனமாக இருக்க வேண்டும் என்பதைத்தான் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

இதனைத் தொடர்ந்து இரா. றஜீன்குமார், ராகவன், நந்தா ஆகியோர் ஒரு கவிதா வாசிப்புச் செய்தனர். தெரியப்பட்ட கவிதைத் துண்டுகள், ஒட்டுக் கவிதைகள் என்றும் அவைகளை 'ஒட்டுக் குழுக்கள்' என்ற அர்த்தத்தில் பார்க்கவேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார். ஆனால் கவிதைகள் யாருடையவை என்பதைக் குறிப்பிட் டிருக்கலாம் என்று தோன்றியது. முடிவில் றஜீன்குமார் தனது 'புல்லாங்குழலும் துப்பாக்கிக் குழலும் இனிதென்பர் தம்மக்கள்' மற்றும் 'என்றோ ஒரு நாள் எழும்' என்னும் கவிதைகளைப் படித்துக் காட்டினார்.

இலக்கியச் சந்திப்பின் 35வது தொடர் ஜேர்மனியில் உள்ள ஸ்ருட்காட் நகரில் நடைபெறும் என்று முடிவு செய்யப்பட்டது.

---

## உயிர்நிழலுக்கு...

'உயிர்நிழல்' ஒக்டோபர் - டிசம்பர் 2006. (இதழ் 25) வாசிக்கக் கிடைத்தது. அம்பையின் 'கைலாசம்' ஆற்றொழுக்கான பெண்மையப் பிரதி. பெண்ணுடல் பற்றிய ஆழ்ந்த தேடல் பிரதியில் முதன்மை பெறுகிறது. முரண்களை நெருடலின்றி உருவாக்குவதும் உருவழிப்பதும் இடையறாது தொடர்வது இப்பிரதியை முக்கியமானதாக்குகிறது. இதே போன்றதொரு அமைப்பியலின் கீழ்வரும் பிரதி பா. தில்லைநாதனின் 'இது கண்காணிக்கிறது' என்ற கதையை உயிர்நிழலில் வாசித்திருக்கிறேன். அக்கதையினால் என்னுள் எழுந்த அதிர்வுகள் இன்னமும் எஞ்சியிருந்ததாகவே கருதுகிறேன்.

'தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் எதை நோக்கி ? - தீர்வை நோக்கியபாதையில் இலங்கை அரசியல்' என்ற வி. சிவலிங்கம் எழுதியுள்ள கட்டுரை பன்முகநோக்கில் விரிந்து செல்கிறது. நேர்மையாகவும் வெளிப்படையாகவும் சில விடயங்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இலங்கையின் எந்தவொரு மூலையில் இருந்து கொண்டும் இவ்வாறான கருத்துக்களை முன்வைக்க முடியாது.

'எளிமை என்பது அறிவு ஜீவிதத்திற்கு ஆசுவாசம் தருவது - யஸ்மினா ரேஸாவுடனான உரையாடல்' இன்னொரு தளம் நோக்கிய நகர்வு. போலித்தனம், பாசாங்கு செய்தல் முரண்பாடுகளை வளர்த்தல், அந்நியமாதல், மன அழுத்தத்திற்குள்ளாதல் என எல்லாவித அம்சங்களையும் இயல்பாகப் பேசியிருப்பது கவனத்தையீர்க்கிறது.

லக்ஷ்மியின் 'பிரத்தியேக நாட்குறிப்பிலிருந்து...' வாசித்தவை தொடர்பில் சில வார்த்தைகள். மூன்றாந்தரக் காமரசம் ததும்பும் பாடல்களுக்கு அபிநயித்தல் என்பது எல்லா இடங்களிலும் சர்வசாதாரணமாகிவிட்டது. சில அறிவுஜீவிகள் இது போன்ற விடயங்களை உலக மயமாக்கலின் விளைவுகளெனச் சுட்டிக்காட்ட முயல்வதுதான் எனக்கு வெகு அபத்தமாகப்படுகிறது. 'பாலியல் கல்வியைப் புகுத்துவதற்கு இதுவுமொரு சிறந்த வழி' எனச் சில 'மேதைகள்' சொல்வதையும் செவிமடுத்திருக்கிறேன். கர்த்தரே இவ் அறிவு ஜீவிகளிடமிருந்து எம்மைக் காத்தருளும்!

விமுக்தி ஜயசுந்தரவின் The Forsaken Land தொடர்பான பிரதீபனின் அபிப்பிராயங்களுடன் நான் முழுமையாக உடன்படுகிறேன். எனினும் 'புதுப்பேட்டை' போன்ற சொறித்தனமான படங்களை சாருநிவேதிதா போன்றோர் தூக்கிக் கொண்டாடுவதுதான் மனவருத்தத்திற்குரியது.

**- இராகவன். கரவெட்டி. (இலங்கை)**